தமிழ் வாழ்க!

தமிழ்ப் பொழில்

கரந்தைத் தமிழ்ச்சங்கத் திங்கள் வெளியீடு

துணர் : 57	திருவள்ளுவர் ஆண்டு — 2014 உருத்ரோத்காரி — தை ஜனவரி – பிப்ரவரி 1984	மலர் 10

ஆற்றுப்படை அளிக்கும் அழகு காட்சிகள் :

புலவர் க. சுப்பிரமணியன், எம். ஏ., பி. எட்.

மனித வாழ்க்கை நிகழ்ச்சிகளால் பெறும் நெஞ்ச மாற்றம், இயற்கையை நோக்கிப் பெறும் நெஞ்சமாற்றம். இவ்விரண்டுமே கவிதைக்கு அடிப்படை என்பார் ஹேசலிட். கவிஞனைத் தூண்டி விடும் மூலமாக இயற்கை காணப்படுகிறது என்பது வால்டர், எச். ஏவர்ட்,கூற்றாகும். ஆற்றுப்படை இலக்கியத்தின் அடிப்படையாகவும் ஆற்றுப்படைக் கவிஞர்களைத் தூண்டிவிட்ட மூலமாகவும் "இயற்கை" காட்சியளிக்கிறது எனலாம்.

தலைப்பில் இயற்கை :

ஆற்றுப்படைகள் ஐந்தனுள் இரண்டின் தலைப்புக்களும் இயற்கையை ஒட்டி அமைந்துள்ளன. திருமுருகாற்றுப்படை,

மலைபடுகடாம் எனும் தலைப்புக்களும் இயற்கைத் தலைப்புக் களாகும் 'முருகு' என்னுஞ் சொற்கு இளமை, மணம், தெய்வம் முதலிய பதினாறு பொருட்களைப் பல்கலைக்கழகப் பேரகராதி காட்டுசிறது [TamilL EXICON—page 327] பழந்தமிழர் குறிஞ்சி யழகையே தெய்வமாகக் கொண்டு 'முருகு' என்றனர் என்பார் திரு. வி. க. இயற்கையே 'இறைவனின் ஆடை' எனும் கதேயின் கூற்றுக்குச் சான்றாகும். திருமுருகாற்றுப்படையின் தலைப்புக்கும் இயற்கை அடிப்படையாகிறது எனலாம்.

மலையை யானையாக உவமித்து அதனிடத்துப் பிறந்த ஓசையைக் 'கடாம்' எனச் சிறப்பித்ததனால் இப்பாட்டிற்கு மலை படுகடாமென்று பெயர் கூறினார். கடாம், ஆகு பெயராய் அதனாற் பிறந்த ஓசையை உணர்த்திற்று என்பார் நச்சினார்க்கினியர்.

"...மதநீர், மதமுழக்கம், மதத்தின் மணம் ஆகிய இவைகள் என்ற கருத்துக்களை எல்லாம்'மலைபடுகடாஅம்' என்ற அத்தொடர் உணர்த்துகின்றது. அதனால் அந்த மலைகளின் வளம் புலனா கின்றது. மதயானையின் மேல் இருந்து மதயானைக் கூட்டங்களை அடக்கி நடாத்தும் வல்லவன் போல அந்நவிர மலையின் மேல் இருந்து பல்குன்றக் கோட்டத்தை அரசாளும் நன்னனது உயர்ச்சி தோன்றுகின்றது; இவ்வளவு நயமான தொடராக இருத்தலினால் 'மலைபடுகடாஅம்' என்பதையே இப்பாட்டுக்குப் பெயராக வைத்து வழங்கத் தொடங்கினர்"... என்பது சேதுரகுநாதனின் கூற்றாகும். இக்கூற்று 'மலைபடுகடாம்' எனும் இயற்கைத் தலைப்புக்களித்த பாராட்டுரையாகும்.

தொடக்கத்தில் இயற்கை :

மனித வாழ்வின் தொடக்கம் இயற்கையாதல் போல் ஆற்றுப் படைகளின் தொடக்கமும் இயற்கையாகவே அமைந்துள்ளது. மேருவை வலம் வரும் ஞாயிற்றில் தொடங்குகிறது திருமுருகாற்றுப் படை.

"உலகம் உவப்ப வலன் ஏர்பு திரிதரு
பலர் புகழ் ஞாயிறு கடற் கண்டாஅங்கு". [வரிகள் 1–2]

இடையறாத செல்வ வருவாயினையுடைய அகன்ற இடத்தை யுடைய பெரிய ஊரில் தொடங்குகிறது பொருநராற்றுப்படை

"அருஅ யாணர் அகன்றலைப் பேரூர்" [வரி : 1]

மூங்கிலாகிய தோளையுடைய மண்மகளின் மலையாகிய அழகிய முலையிற்கிடந்தசையும் முத்துவடம் போல மலையினின்றும் வரும் காட்டாற்று நீரில் தொடங்குகிறது சிறுபாணாற்றுப்படை [வரி 1-3]

பெரிய ஆகாயத்தில் தோன்றிப் பரந்த இருளை விழுங்கும் கதிரவனில் தொடங்குகிறது பெரும்பாணாற்றுப்படை.

அகலிரு விசும்பிற் பாயிருள் பருகிப்
பகல கான்றெழுதரு பல்கதிர்ப் பருதி [1–2]
மழைபெய்த வசும்பில் தொடங்குகிறது மலைபடுகடாம்
திருமழை தலைஇய இருள்நிற விசும்பின் [வரி : 1]

திருமுருகாற்றுப்படை

இயற்கைச் செய்திகள் :

அழகிய அறுபடை வீடுகள் :

திருப்பரங்குன்றம் [வரி : 77], திருச்சீரலைவாய் [வரி : 125] திருஆவினன்குடி [வரி : 175], திருவேரகம் [வரி : 189], குன்றுதோறாடல் [வரி : 217], பழமுதிர் சோலை [வரி : 317] என்னும் இயற்கை இருப்பிடங்களில் முருகன் உறைகிறான் என்பார் நக்கீரர். 'இயற்கையே இறைவனின் ஆடை' எனும் கதே கூற்றுக்கு (Nature is the living visible garment of God) நக்கீரர் பாடல் சான்றாகிறது

கடலிலே நீர் முகந்த சூலினையுடைய மழை திங்களும் ஞாயிறும் இருளை நீக்கும் ஆகாயத்தே பெருமையையுடைய துளியை முற்படச் சிதறிக் கார்காலத்து முதற்பெயலைச் சொரிந்த தண்ணிய நறிய காட்டிடத்து எனக் காட்டின் அழகு காட்டப்படுகிறது.

கார் கோண் முகந்த கமஞ்சூன் மாமழை
வாள் போழ் விசும்பில் வள்ளுறை சிதறித்
தலைப்பெயல் தலைஇய தண்ணறுங் கானத்து [வரி 7-9]

செங்கால் வெட்சி, பைந்தாட்குவளை, பெருந்தண் சண்பகம், காந்தள், கரிய புறவிதழினையும் மேலில் துய்யினையுமுடைய பூக்களையுடைய மருதினது ஒள்ளிய பூங்கொத்துக்கள், விரிமலர் வேங்கை முதலிய மலர்களின் அழகினை நக்கீரர் புலப்படுத்தியுள்ளார்.

[வரிகள் 21-36, 43]

அசோகின் தளிரும் விளாவின் தளிரும் [வரிகள் 31, 37] சுட்டப்படுகின்றன.

மரமேறுதற்றொழிலிற் சிறப்புடைய மந்திகளும் மரங்களின் நீட்டத்தால் ஏறியறியாத மரம் நெருங்கின பக்கமலை எனும் அழகிய மலைக்காட்சி "மந்தியும் அறியா மரன் பயில் அடுக்கத்து" [வரி. 42] என்ற ஒரே தொடரால் விளக்கப்படுகிறது.

அழகினையுடைத்தாகிய சிறகையுடைய வண்டினுடைய அழகினையுடைய திரள் தாமரைப் பூவில் இராப் பொழுது துயில் கொண்டு விடியற் காலத்தே தேன் நாறுகின்ற நெய்தற் பூவையூதி ஞாயிறு தோன்றின காலத்தே கண்போல் மலர்ந்த விருப்பம் பொருந்திய சுனைப்பூக்களிலே சென்று ஆரவாரிக்கும் அழகு வாய்ந்தது திருப்பரங்குன்றமாகும்

முட்டாட் டாமரைத் துஞ்சி வைகறைக்
கட் கமழ் நெய்தலூதி யெற்படக்
கண் போன் மலர்ந்த காமரு சுனைமலர்
அஞ்சிறை வண்டின் அரிக்கணம் ஒலிக்குங்
குன்றமர்ந்துறைதலும் உரியன் ... [வரி : 73-77]

துகிற் கொடிகளைப்போல அசைந்து அகிலைச் சுமந்து சந்தனமாகிய பெரிய மரத்தைத் தள்ளி சிறு மூங்கிலினது பூவுடைத்தான அசைகின்ற கொம்பு தனிப்ப வேரைப் பிளந்து தேவருலகத்தைத் தீண்டுகின்ற நெடிய மலையிடத்தே ஞாயிற்றின் மண்டிலத்தைப் போல ஈ வைக்கப்பட்ட தண்ணியவாய் மணக்கின்ற விரிந்த தேன் கூடு கெட நன்றாகிய பல ஆசினிகளினுடைய முற்றிய சுளை தன்னிடத்தே கலக்க மலையின் உச்சியில் உண்டான சுர புன்னையின் நறிய மலர்கள் உதிரக் கருங்குரங்கோடே கரிய முகத்தையுடைய முசுக்கலைகளும் நடுங்கப் புகரையணிந்த மத்தகத்தையுடைய பெரியபிடி குளிரும்படி வீசி பெரிய யானையினுடைய முத்தையுடைய வாகிய வெள்ளிய கொம்புகளை உள்ளடக்கி நல்ல பொன்னும் மணியும் நிறம் விளங்கும்படி மேலே கொண்டு குதித்துப் பொடியான பொன்னைத் தெள்ளி வாழையினது பெரிய முதல் துணியத் தெங்கினது இளநீரையுடைய சீரிய குலை உதிர அவ்விரண்டினையும் மோதி மிளகினது கொடியின் கரிய கொத்துக்கள் சாயப் பீலியையுடைத்தாகிய இடத்தினையும் மடப்பத்தை யுடையதாகிய ஒழுக்கத்தினையுமுடைய மயில்களோடே கோழியினுடைய வலியையுடைய பெடை வெருவிப் பலவும் சேரக் கெட ஆண் பன்றியுடனே உள்ளே வெளிற்றினையுடைத்தாகிய கரிய பனையினது புல்லிய செறும்பை யொத்த கரிய நிறத்தையுடைத்தாகிய மயிரினையுடைய உடம்பினையும் வளைந்த அடியினையுமுடைய கரடி பெரிய கல்விண்ட முழைஞ்சிலே சேரக் கரிய கொம்பினையுடைய ஆமாவினுடைய நன்றாகிய ஏறுகள் முழங்க மலையின் உச்சியினின்றும் இழுமென்னும் ஓசைபடக் குதிக்கும் அருவி [வரிகள் : 295- 317 என்று அருவியின் அழகு வருணிக்கப்படுகின்றது.

தேவ மகளிரின் பொலிவு 'கைபுனைந்தியற்றாக் கவின் பெறு வனப்பு' (Natural beauty) என அழகுடன் கூறப்படுகிறது.

சிவனும் உமையும் 'ஆல் கெழு கடவுள், மலைமகள்' என்று இயற்கைப் பொருளுடன் சேர்த்துக் கூறப்படுகின்றனர்.

[வரிகள் : 256, 257]

உவமையில் இயற்கை :

தேர் உருள் போலும் பூ எனும் உவமை வட்டப்பூவை[வரி : 11] உணர்த்துகிறது

கோபத்தன்ன தோயாப்பூந்துகில் எனும் உவமையால் செந்நிற ஆடைக்குச் [வரி ; 15] சிவந்த இந்திர கோபம் ஒப்பிடப்படுவதை யறியலாம்

மருதப்பூவைப் போன்றது சந்தனம் [33, 34]
கோங்கினது குவிந்த அரும்பை யொத்தது இளமுலை [35]
ஓடுங் காற்றெழுந்தாலொத்தது களிறு [வரி 82]
திருமணி மின்னோடே மாறுபடுகின்ற விளக்கத்தது[வரி:84,85] என்பது வினைப்பால் உவமமாகும்.

மகரக்குழை மதியைச் சூழ்ந்து நீங்காத மீன்கள் போல் ஒளிர்ந்தன [வரி : 87]

உருமேற்றினது இழப்புப் போன்ற ஓசையுடையது முரசு [வரி : 121]

அழகோடு வடிவாலும் நிறத்தாலும் வலம்புரிச் சங்கினை யொத்தது வெள்ளிய நரை முடி [வரி ; 126, 127]

மீன்கள் பூத்தது போன்ற தோற்றத்தினர் -- காற்றெழுந்தாலொத்த செலவினர் நெருப்பெழுந்தாலொத்த வலியினர் இடி போன்ற குரலினர் (வரிகள்: 169—172) எனத் தொடர் உவமையில் இயற்கை இடம் பெறுகிறது.

மயில் போன்ற மகளிர் (வ. 05)மாண்பிணைப் போன்ற மகளிர் (வ. 216)

இவ்வாறு இயற்கைப் பொருளை அழகுப்படுத்தப் பிற உவமைகள் வருதலும் பிற பொருள்களை விளக்க இயற்கை உவமையாக வருதலும் விரவிக்காணப்படுகின்றன.

அடைமொழிகள் :

இயற்கையைச் சிறப்பிக்கத் தேர்ந்த அடைமொழிகளை நக்கீரர் பயன்படுத்துகிறார். அதன் வாயிலாக அழகுக் காட்சி நம் கண்முன் கொண்டுவரப்படுகிறது.

சீர்திகழ் சிலம்பகம் (41) சுரும்பு மூசாச் சுடர்ப்பூங்காந்தள் (43), பனிக்கடல் (45), கவிழிணர்மா (59), அகல்வியல் (72) முட்டாட்டாமரை (73) கட்கமழ் நெய்தல் (74), அஞ்சிறை வண்டின் (76) விரையுறு நறுமலர் (188), பைங்கொடி நறைக்காய் (190), வெண் கூதாளம் (191), நறுஞ்சாந்து (192) குண்டுசுனை (199), இலையுடை நறும்பூ (201), செங்கான் மரா அத்த (202), பெருந்தண் மாத்தழை (203), செவ்வரைச் செயலைத் தண்டளிர் (206), சிறு தினை (218), கொழுமலர் (229), மாத்தாட் கொழுவிடை (232), சிறு பசு மஞ்சள் (235), பெருந்தண் கணவீரம் (236), நளிமலைச் சிலம்பு (238), இமிழிசை அருவி (240), உருவப் பல்பூ (241), ஓடாப்பூட்கைப் பிணிமுகம் (247), நெடும்பெருஞ்சிமையம் (253), நீலப்பைஞ்சுனை (253), மால்வரைமலை (254—5) விண்பொரு நெடுவரைக் குறிஞ்சி (267)-என்பன அழகிய அடைமொழிகள் எனலாம்.

இவ்வாறு இயற்கைத் தன்மையை இறைமைத்தன்மையாகவும் இயற்கையைக் கடந்தவன் இறைவன் என்று கூறலும் நக்கீரரின் தத்துவங்களாக உள்ளன. பொருளியல் அடிப்படை (Materialistic Basis) கொண்ட ஆற்றுப்படையை இறைமை இணைவுப் பண்பு களோடு கூடிய ஆன்மீக ஆற்றுப் படையாக நக்கீரர் மாற்றுகிறார் எனலாம்.

பொருநராற்றுப்படை

இயற்கைச் செய்திகள் :

'இலையில்லாத மராமரத்தின்' நிழல் அலையை மேலே கட்டினது போல் இருக்கிறதாம். [வரி ; 50,51] இது பயிரியல் (Botony) அழகுக் காட்சி, இனி உயிரியல் அழகுக் காட்சியும் இன்புறுத்தா நிற்கும்.

நெடுந்தேர் யானைக் கொம்பாற் செய்த தாமரை முகையினைக் கொண்டதாம் [வரி : 165]

குதிரை பால் போன்ற நிறமுடையதாம் [வரி 163]

யானைகள் பருத்த பெரிய வளைவினையுடைய கையினையும் அச்சந்தோன்றும் ஓட்டத்தினையும் கோபத்தினையும் உடையன வாக இருந்தன [வரி : 170]

'நிழலருமை வெயிலில் நின்றபின்' என்பதுபோலக் காவிரியின் சிறப்பு வறட்சியுடன் சேர்த்துக் கூறப்படுகிறது,

கதிரவன் தன்னிலையைவிட்டுப் பல கிரணங்களைப் பரப்புகையினாலே கஞ்சங்குல்லை தீயவும் மரக்கொம்புகளை நெருப்புத் தின்னவும் மலை அருவிகளை இழப்பவும் மேகம் கடலிடத்து முகத் தலை மறக்கவும் பெரியவற் கடம் உண்டாகிய நற்குணம் இல்லாத காலத்தும் நறைக்கொடியும் நரந்தப் புல்லும் அகிலும் சந்தனமுமாகிய சுமையைத் துறைதோறும் இளைப்பாறத் தள்ளிப்போய் நுரையைத் தலையிலேயுடைய ஆரவாரத்தையுடைய நீர் குளத்திலும் கோட்டகத்திலும் புகுந்தோறும் நீராடு மகளிர் கடுகக் குடைந்து விளையாட வளைந்து நின்று அரிவாளின் வாயாலே நெல்லையறுத்துச் சூட்டை மலையாக அடுக்கி நாடோறும் கடா விட்டு மேருவென்னும் படிதிரட்டின் தொலையாத நெற்பொலி நெருங்கத் தெற்றின குதிரின் கண்ணே வெற்றிடம் இல்லையாம்படி கிடத்தற்குக் காரணமான வரம்பு கட்டின வேலிநிலம் ஆயிரங்கலமாகிய செந்நெல்லின் விளையுட்டாகக் காவிரி பாதுகாக்கும். [வரிகள் : 233-240]

ஒருசேர நானில வளம் சிறப்பித்துக் கூறப்படுகிறது.

முல்லை நிலத்துக் கோழிகள் மருதநில நெற்கதிரைத் தின்றன.
மருத நிலத்தின் மனையிற்கோழிகள் முல்லை நிலத்தினையைத் தின்றன.
குறிஞ்சிநில மந்திகள் நெய்தல் நிலக்கழியிலே மூழ்கின. நெய்தல்
நிலநாரைகள் குறிஞ்சியிலே கிடந்தன [வரிகள் 233—240]
சேரணாட்டின் அழகு சொக்கவைக்கிறது. ஒரு மா நிலத்தில் திடர்தோறும் நெற்கூடுகள் பொருந்தினம சோழநாடு.

தாழ்ந்த தெங்கினையுடைய குளிர்ந்த மரச் சோலைகளில் இருக்கின்ற குடிமக்களிடத்தில் உதிர்த்தாற் சிவந்த சோற்றையுடையதாகிய பலியை விழுங்கின கரிய காக்கை மனையைச் சூழ்ந்த நொச்சியின் நிழலிடத்துக் கிடந்தயாணையின் பார்ப்பைத் தான் தின்றலை வெறுத்ததாயின் அதனைப் பின்பு பசித்த காலத்துத் தின்பதாகப் பாதுகாத்துவைத்தது.

பாகற்பழத்தையும் பலாப்பழத்தையும் தின்று காஞ்சி மரத்திலும் மருதமரத்திலும் இருந்த மடப்பத்தைத் தம்மிடத்தேயுடைய பெடை மயில்கள் ஆரவாரித்து அழைக்கும்படி அங்கு நின்றும் போந்த யாழேசை போலும் வண்டினது பாட்டினைக் கேட்டு அதற்குப் பொருந்தத் தோகையை விரித்து அறியாமையையுடைய மயில் நிலவு போலும் இடுமணலிலே பல பகுதிப்பட ஆடும் - [வரி 177-213]

உவமையில் இயற்கை :

பாலையாழின் உறுப்புக்களுக்குப் பல்வேறு இயற்கைப் பொருட்கள் உவமை கூறப்படுகின்றன.

மான் குளம்பு அழுத்திய இடத்தை யொத்த இரண்டருகும் தாழ்ந்து நடுவுயர்ந்தது பத்தல்—விளக்கினது எரிகின்ற நிறத்தை யுடைய விசித்துப் போர்த்தலுற்றது தோல்—மிக அறியப்படாத இளைய சூலையுடைய சிவந்த நிறத்தையுடையோனது அழகிய வயிற்றின் மெல்லியதாகிய மயிர் ஒழுங்கு படக் கிடந்த தோற்றம் போல இரண்டு தலையும் கூட்டித் தைத்த மரத்தைப் பொதிதலுறும் போர்வை — நண்டின் கண்ணிரண்டும் போன்ற பத்தலிரண்டும் சேர்த்தற்குத் திறந்த துளைகளின் வாய் மறைதற்குக் காரணமாகிய முடுக்குத மைந்த ஆணி- உலாவிற்கு எட்டா நாளில் திங்களின் வடிவை உடைத்தாய் உள் நாக்கில்லாத வறியவாய் — பாம்பு தலையொடுத்தாலொத்த தண்டு--கரியநிறத்தையுடையோனுடைய முன் கையில் அழகினையுடைய நேர்ந்த கொடியை யொக்கும் வார்க் கட்டு-, நிலவு,- ஆய்தினையரிசியிற் குத்தலரிசியை ஒத்த நரம்பு – கலியாணஞ் செய்தமை தோற்றுகின்ற மாதரைப் போன்ற அழகு ஆகியவை கொண்டது பாலையாழாம் [வரிகள் : 4-16]

படம் விரித்த பாம்பினது பொறியை ஒப்பக் கையினது வடுப் பட்டுக் கிடந்த கண்ணகன்ற உடுக்கை என்று உடுக்கையின் அழகு கூறப்படுகிறது. [வரி ; 69, 70]

உடல் உறுப்புகளின் அழகு காட்சி உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும்.

அறல் போன்றது கூந்தல், பிறை போன்றது திருநுதல் [வரி ; 25]

இலவினது இதழைப் போன்றதுவாய் [27] முத்துப்போன்றது போல் [28] அசைகின்ற மூங்கில் போலும் தோ... [32] காந்தன் அனைய மெல்விரல் [33] கிளிவாய் போன்ற நகம் [34] நீர்ச்சுழி போன்ற கொப்பூழ் [37] பலவண்டினங்களின் இருப்பையொத்த பலமணி கோத்தவடங்களையுடைய மேகலையணிந்த அல்குல் [39] பெண் யானையின் துதிக்கை போன்ற தொடை [40] ஓடியிளைந்த நாயினது நாய்போலச் சிறிய அடி [42]

மரல் பழுத்தாற் போன்றது துளும்புநீரையுடைய கொப்புளம்

பெடை மயில் அருகுநின்ற மயில் போலும் சாயலினையுடைய பாடினி [47]

முல்லை முகையின் தகைமையினையுடைய வரியற்ற இடை முரியாத அரிசி [112]

பழுத்த மரத்தை நினைத்துச் செல்கின்ற பறவை போலப் பாணன் கரிகாலனிடம் சென்றான்.[64]

பாம்பின் தோல் போன்றது ஆடை [83]

துடி போன்றது யானையின் அடி [125]

வெம்மையையுடைய எல்லாரும் விரும்பப்படும் இளஞாயிறு கடலின் மீது பகலில் கிரணங்களைப் பரப்பிப் பின்னர் விசும்பிலே மெத்தெனச் சென்றாற்போலக் கரிகாலன் தவழ்ந்து நடை பயின்றான் [135–137]

ஆளிக்குருளை இளம் பருவத்தே களிற்றைக் கொன்றது போலக் கரிகாலன் சேர பாண்டியரை ஒரு களத்தே படச் செய்தான். [141]

கொட்டைப்பாசியின் வேர் போல அழுக்குடன் குறைந்த தையலையுடைய துணிகள் [153]

அடைமொழிகள் :

அகன்றலைப் பேரூர் (1), ஆய்தினை (16), நெடுவரை (33), அரக்குருக்கன்ன செந்நிலம் (43), விரிகதிர் வெள்ளி (71), நள்ளிருள் (72),

கருங்காக்கை (184), நருமுல்லை (200), பொற்கொன்றை(201),

மணிக்காயா (201), நற்புறவு (202), ஓங்குதிரை (206), தீம்பெண்ணை (207),

கொழுங்காந்தள் (209), நிலவு எக்கர் (212), கானக்கோழி-மனைக்கோழி (222-223),

இரும்பௌவம் (204), பூம்புன்னை (205), மடமஞ்ஞை (212), அருவிமாமலை (235)

சிறுபாணாற்றுப்படை

இயற்கைச் செய்திகள் :

எருமை செங்கழுநீர்ப் பூக்களைத் தின்று விட்டு அசைபோட்டுக் கொண்டு மிளகுக் கொடி படர்ந்த பலாமரத்தின் நிழலில் தன் முதுகை மஞ்சள் மெல்லிலை தடவிக் கொடுக்கக் காட்டு மல்லிகைக் கொடி மீது உறங்கும் காட்சி அழகிய காட்சியாகும். (41-46)

மந்திகள் கிளிஞ்சல்களில் முத்துக்களைப் போட்டுக் கிலு கிலுப்பை ஆட்டி மகிழ்ந்தன. [51-62]

இடி நெடிய மலையுடன் போரிட்டு அதன் தலையை இடித்துச் சென்றது' யானைகளின் மதவருவி எழுந்ததுகளை அவிக்கையி னாலே புழுதியடங்கின தெருவினையுடையதாம் ஊர் (200)

காற்று மலையில் உறங்குகிறதாம் (106)

நாய்க்குட்டி விழியாத கண்ணையும் வளைந்த செவியினையும் உடையதாம் (130)

மகளிர் நீர்த்துறையில் நீராடும் போது நீரில் மிதந்து வந்த நாகம் அகில், ஆரம் ஆகிய மரங்களைத் தோள் புணையாகக் கொண்டு நீந்தி மகிழ்ந்தனர்.

தெளிந்த மேகம் நீலமணி போலும் மயிலினுடைய விரிந்த தோகைக்கு நடுவே தனது மஞ்சைப்பரப்பி மலையில் தவழுமாம் (265)

"நூற்றுக்கு மேற்பட்ட அடிகள் இயற்கைக் காட்சிகளைப் பற்றியவை. அவற்றை நீக்கி விட்டுப் பார்த்தால் அப்பாடல் இப் போது இருப்பதைவிடச் சிறியதாக இருக்கும்... இயற்கைக் காட்சி யைப் பின்னணியாகக் கொண்டு பாட்டில் பலகருத்துக்கள் இடம் பெற்றுள்ளன. பாணர்கள் சந்திக்கும் கொடியவழி மூவேந்தர்க்கும் உரிய வளமான தலைநகரங்கள் ஓய்மான் நாட்டில் உள்ள நெய்தல் நிலத்து எயிற் பட்டினம், முல்லை நிலத்து வேலூர் மருதநிலத்து ஆமூர் குறிஞ்சி நிலத்துக்கிடங்கில் நீர்வளம் மிக்க மாவிலங்கை ஆகியவை இயற்கைக் காட்சியினால் பொலிவோடு விளங்குகின்றன. நத்தத்தனார் ஐந்திணைக்கும் உரிய இயற்கைக் காட்சிகளைப் பாடியிருப்பினும் நெய்தல் நிலத்துக் காட்சிகளையும் மருதநில வளமுமே சிறப்பாக அமைந்துள்ளன. இன்னும் நுணுகிப் பார்த் தால் மருதநிலக் காட்சிகளே பெருஞ்சிறப்புடன் விளங்குகின்றன எனலாம்" என்பார் மு.வை. அரவிந்தன்.

—(சிறுபாணாற்றுப்படை—திறனாய்வு பக்கம் : 81,82)

உவமையில் இயற்கை,

வாழைப்பூப்போலப் பின்னி முடிக்கப்பட்டது கூந்தலாம் (22)

மகளிர் கூந்தல் போன்றது மயில் கலாபம் (262-65)

பொற் கலம் இளைய ஞாயிறு போன்றது (244)

மேருமலை ஒரு கண்ணை விழித்துப் பார்ப்பது போன்ற அடையாத வாயில் (206)

வெண்டாமரை மலரில் மொய்க்கும் கருவண்டுகள் முழுவெண் மதியைச் சேர்ந்துள்ள கரும்பாம்பு போலத் தோன்றுகிறதாம் (183–185)

அலை கொணர்ந்த மரம் உறங்குகின்ற ஒட்டகம் போல இருந்ததாம் (154)

வெண்ணிற ஆடைக்கு மூங்கிலின் உள்ளே இருக்கும் வெள்ளாடை உவமையாகிறது (236)

கேணியில் பூத்த மலரின் இதழ்நுனிக்கு வேலின்நுனி உவமை யாகிறது [173] மகளிரின் மயிர்ப்பின்னலுக்குப் பெண்யானையின் கை உவமை யாகிறது. [191]

கிளிஞ்சலின் ஓரம் வானின் ஓரம் போன்றது [58]

சீறியாழில் பத்தரின்மேல் மூடியிருக்கும் தோலின் செந்நிறத்திற்குச் குமிழம் பழத்தின் நிறத்தை உவமையாகக் கூறுகிறார். [224,5] தேர்த்தட்டின் வெளிப்புறம் மறையுமாறு மூடப்பட்ட பலகை சாதிலிங்கத்தை உருக்கி வார்த்து நிறம் ஊட்டப் பட்டுள்ளது. அவ்வண்ணத்திற்கு மலர்ந்த முள் முருக்கம் பூங்கொத்தின் வண்ணத்தை உவமையாகக் கூறுகிறார். இவை அழகிய வண்ணக் காட்சியாகும்

அடைமொழிகள் :

மணிமலை [1], மாநிலமடந்தை [1], நறும்பொழில் [4], வெம்பரல் [8] மணிவயிற்கலாபம் [15], மால்வரை [21], நளிச்சினை வேங்கை [23], களிச்சுரும்பு [24], வெம்முலை [26], வண்கோட் பெண்ணை [27], வாணுதல் [31] கயவாய் எருமை [42], பைங்கறி [43] மஞ்சள் மெல்லிலை [44], நளிநீர் முத்தம் [57], வாள் வாய்எருந்து[58], துறுநீர்க்கடம்பு [69], வண்முகை [72], தெய்வத்தாமரை [73], தண்பணை [78], காமருதும்பி [77], வளமலை [84], சிறுவீ முல்லை [89], நறுவீயுறைக்கு நாகம் [88], கமழ்பூஞ்சாரல் [100], கவினியநெல்லி [100], நளிமலை [107] நறும்போது [108], குறும் பொறை [109], விரிகடல் [114], வான்பொரு நெடுவரை [128], சிறுகண்யானை [142], அலைநீர்த்தழை [146], நெடுங்காற் புன்னை [149], பாடல் சென்ற நெய்தல் [151] பைந்நனை அவரை [164], கருநனைக் காயா [165] கொழுங்கொடி முசுண்டை [166], செழுங்குலைக்காந்தள் [167], வியன்மலை [170], தேமாமேனி [176], குறுங்காற் காஞ்சி [179], பாசடை முள்ளரைத் தாமரை [182-3], நீலச் செங்கட் சேவல் [184], அண்ணல் யானை [200], கடவுண் மால்வரை [205], வாள்நிற விசும்பு [242],

உருவவான்மதி [251], மதனுடை நோன்றாள் வாண் முகப் பாண்டில் [259, 60], மணிமயிற் கலாபம் [264].

சிறுபாணாற்றுப்படையில் வானவில்லின் எழில், வெண் முகிலின் தூய்மை, மழைநீரின் தன்மை, மின்னலின் ஒளி, இடியின் ஒலி ஆகியவை எல்லாம் ஒருங்கே இடம் பெற்றுள்ளன. அப் பாடலைச் சொற்களுக்காக ஒருமுறை, ஓசைக்காக ஒருமுறை, உவமைக்காக ஒருமுறை, கற்பனைக்காக ஒருமுறை, இயற்கைக் காட்சிக்காக ஒருமுறை கற்கவேண்டும். ஒவ்வொருமுறை கற்கும் போதும் அப்பாடல் புத்தம் புதிதாகத் தோன்றி இன்பமூட்டும்'' என்பார் மு. வை. அரவிந்தன்.

—(சிறுபாணாற்றுப்படை. திறனாய்வு—பக்கம்: 102)

பெரும்பாணாற்றுப்படை

இயற்கைச் செய்திகள் :

பார்வைமான் கட்டி நின்ற தேய்ந்த தாளினையுடைய விள வினது நிழலையுடையதாக முற்றம் விளங்கியது [95]

வழியிடத்தில் நீரின்மையின் மயங்கித்திரியும் மானடி அழுந்திக் கிடந்தது [106]

யாழ் ஒலிக்கும் குறிஞ்சிப் பண்ணைப் பல காலினையுடைய வண்டுகள் தம் சுற்றத்தின் ஓசையாகக் கருதிச் செவி கொடுத்துக் கேட்கும் : [183]

வயலின் நண்டின் சேற்றின்கண் உண்டாகிய முழை கெடும்படி பசிய கோரையை அடியிலே குத்தியெடுத்த மண் கிடக்கின்ற கொம்பையுடைய கரிய கடாக்கள் போர் செய்யும் [208]

குழலின் முற்றத்தே அவலையிடிக்கும் உலக்கையினது ஓசை செறிகையினாலே அதற்கு அயலிடத்தனவாகிய வளைந்த வாயை யுடைய கிளிகள் தமக்குண்டாகின்ற பகையாக நினைத்து அஞ்சும் [224-226]

மருதினது உயர்ந்த கொம்பால் உண்டாகிய நிழலில் பாம்பு கிடக்கும் [232]

குளத்தின் தூண்டிலில் மறையப் பொதிந்த இரையைக் கௌவி அகப்படாது போன வாளை மீன் நீர்க்கு அணித்தாய் நின்ற பிரம் பினது காற்றாலசையும் நிழலை நீரிற் கண்டு அஞ்சும் [287, 288]

கடவுள் சூடுதற்குரிய தாமரைப் பூ நெருப்பின் தன்மை நீரிலே உண்டாகப் பூத்தது [289]

வானத்தில் இந்திர வில் தோன்றியது [291]

இராசான்ன மென்னும் பறவையின், பெயரை நெல் பெற்றது [305]

மேகங்கள் விளையாடித் திரியும் மூங்கில் வளர்கின்ற பக்க மலையிலே தம்மை வருத்தும் யாளி பாய்கையினாலே திரட்சி யமைந்த யானை பலவும் கூடிக் கலங்கிக் கூப்பிட்டாற் போல ஆலையார வாரிக்கும் மாறாத ஓசையையுடைய கருப்பஞ் சாற்றைக் கட்டியாகக் காய்ச்சும் புகை சூழ்ந்த கொட்டில்கள் காணப்பட்டன. [256]

யானைக்கும் பூண்சேர்க்கும் கொல்லன் இரும்பைக் கையை உரத்துக் கொட்டின கூடத் தெழுந்த ஓசைக்கஞ்சி மாடத்திடத்துப் புறவினுடைய சிவந்த காலையுடைய சேவல் இனியதுயில் நீங்கியது [437]

தெய்வங்களையுடைய சாரலில் இனிய தாளத்திலே கின்னர மென்னும் பறவைகள் பாடின [493]

காட்டில் மரம் நெருங்கி வளர்ந்தன. மயில்களாடின. முசுக் கலைகள் பாய்ந்து உதிர்த்த மலர்கள் சிந்தின. மந்திகள் அவ் விடத்துக் கிடந்த தூரலை வாரும் மானும் புலியும் துயில் கொள்ளும் முற்றமும் ஆண்டிருந்தது [495-497]

உவமையில் இயற்கை

யாழின் தோற்றத்தை விளக்க, இயற்கை துணையாகிறது. பாதிரியினது உள்ளிடம் போன்ற தோலும் கமுகினது பாளையாகிய அழகினையுடைய பசிய பூ விரியாமல் கருவாயிருந்தாலொத்த இரண்டு கண்ணால் கூடின செறிந்த துளையும் சுனைவற்றி உள் இருண்டாலொத்த இருள் செறிந்த உண்ணாக்கினையில்லாத வாயினையும் முதற்பிறை பிறந்து ஏந்தியிருந்தாற் போன்ற பின்பு ஏந்தியிருக்கின்ற சுவைத்தலையுடைய கடையினையும் கொடி போன்ற வார்க் கட்டினையும் நீலமணி ஒழுகியது போன்ற கருமை நிறமுடைய பெரிய தண்டினையுமுடையது யாழ் [4-16]

வற்கடம் மிக்க காடு உழவுத்தொழில் முதலியவற்றால் ஆரவாரம் மிகும்படி தொகுதியையுடைய மேகம் துளியைச் சொரிந்தாற் போல பசிமிக்க பாண்சுற்றம் பிறர்க்குக் கொடுக்கவும் மாளாத பெரிய செல்வத்தைப் பெற்றது [23-26]

மலை மாரிக் காலத்து மேகத்தைச் சுமந்து நின்றாற் போன்ற தொத்துளிப் பாயாலே வேய்ந்த ஒலிக்கின்ற வாயையுடையது சகடம் [49 50]

யானைக் கொம்பு மூங்கில் முளை போன்றது [53]

பலாப்பழம் போன்றது மிளகு மூட்டை[77[

இலவத்தினது பசிய காயின் முதுகு விரிந்து பஞ்சு தோன்றினால் ஒத்த வரியை முதுகிலேயுடையது அணில் [83]

ஈந்தின் முதுகு ஆற்றின் அறல் அனையது [84,85]

பன்றியின் கொம்பு அகத்திப் பூப்போல வளைந்திருந்தது[109]

முயற்செவி தாமரையின் புறவிதழ் போன்றது[112]

அம்புக்கட்டுகள் தேனிறால் போன்றன [123]

நெல்லின் சிவந்த அவியாகிய சோறு ஈந்தின் விதை போன்றது [130]

புலிப்போத்தன்ன புல்வணற் காளை [138]

புலியினது முழக்கம் போல மத்து ஆரவாரித்தது [156]

மூங்கில் போன்ற தோள் [161]

தினையரிசிச் சோறு நண்டின் பார்ப்புப் போன்றது [167]

வரகுக்குதிர்கள் பிடித்திரள் நின்றதுபோல இருந்தன. [186]

வரகினதுசோறு சிறுபூளைப் பூப்போன்றது [192]

அவரை விதை வேங்கைப்பூ வனையது [194]

பிடியினது வாயையொத்தது வளைந்த வாயையுடையது கலப்பை [200]

உடும்பினது முகத்தையொத்தது பெருங்கொழு [200]

குறும்பூழின் இளம்பிள்ளை கடம்பின் பூப்போன்றது [204]

ஊள்ளிமீன் சோனகர் கூம்பின் மேலிட்ட அன்ன விளக்குப் போல இருந்தது [316–3 8]

யானையின் உடம்பையொக்கும் சருச்சரயையுடையது தெங்கு [351]

வாழைப்பழம் பிடியின் கொம்பு போன்றது [358]

காந்தளையுடைய பக்கமலையிலே யானை கிடந்தாற் போலப் பாம்பணையாகிய படுக்கையிலே திருமால் துயில் கொண்டான் [371]

வளர்பிறைசூடிச் செக்கர் வானமாகிய அந்திக் காலத்தே உலாவும் மேகம்போல வெண்கொம்பினையுடைய யானைப்பிணத்தைக் குருதியாறு இழுத்துச் சென்றது [412]

கொட்டைப் பாசியின் வேரையொத்த சிதரின ஆடை [467]

உலர்ந்த பெரிய செந்நெல் நிறத்தால் ஞாயிற்றை யொத்தது [473]

உடுக்கள் போன்றன சிறுவெள்ளிக் கலங்கள்-திங்கள் போன்றன பெரிய வெள்ளிக் கலங்கள் [477]

கடலிற் சங்கைக் கண்டாற் போன்ற வெள்ளிய கழுத்தின் மயிரையுடைய குதிரைகள் [487]

அடைமொழிகள் :

வெந்தெறற் கனலி (17), தண்கடல் (18), வியன்காடு [82], நெடுங் கிணறு [97], பகுவாய் ஞமலி [112], வாழ்முள் வேலி [126], கொடுமுகத் துருவை [153], நள்ளிருள் [155], குறுங்காற் கறையணற் குறும்பூழ் [204], கட்கமழ் புதுப்பூ [214], கொடுங்காற் புன்னை [266], தாழ் கோட்பலவு [356], வெயில் நுழைபறியாக் குயில் நுழை பொதும்பர் [374], குறுங்காற் காஞ்சி [375] நெடுங்கொடிப் பாசிலைக் குருகின் புன்புற வரிப்பூ [376], ஒளிறு இலங்கு அருவி[500].

மலைபடுகடாம்

இயற்கைச் செய்திகள் :

“இப்பாட்டில் கூத்தன் செல்லும் வழியின் நலம் தீங்குகளும் அவன் தங்குதற்கேற்ற இடங்களும் ஆங்காங்குக் கிடைக்கும் உணவுகளும் மலைகள் சோலைகள் காடுகள் ஆகியவற்றின் தன்மைகளும் ...... ஊரின் சிறப்பும் கூறுவதாக முன்னர்த் தொகுத்துக் கூறிப் பின்னர் அவற்றை விரித்து உரைத்திருப்பது இப்பாட்டிற்கே உரிய தனிச்சிறப்பாகும். இதனால் இப்பாட்டு நிலநூல் போல்வது என்று கூறுவதும் உண்டு" என்பார், லெப. கரு. இராமநாதன் செட்டியார்.

—[பத்துப்பாட்டு வளம்-ப : 97]

மலையில் தோன்றும் பத்தொன்பது வகைப்பட்ட ஓசைகளை ஆசிரியர் அழகுடன் கூறியுள்ளார். [வரி: 292-348] அவற்றுள் குரங்கின் காட்சியும் ஓசையும் அவலத்தைத் தோற்றுவிக்கின்றன.

பார்ப்பைத் தன் கையால் தழுவிக் கோடலை மறந்த மந்தி எடுத்தற்கரிய ஆழ்ந்த முழையிலே வீழ்ந்திறந்த தன் குட்டிக்குச் சுற்றத்தோடே நெருங்கி ஆரவாரம் செய்ததாம் [311-314]

படுத்துவைத்தன்ன பாறை மருங்கில்

எடுத்து நிறுத்தன்ன இட்டருஞ் சிறுநெறிக் காட்சி [15-16] பேரழகு வாய்ந்தது.

மலையுஞ் சோலையு மாபுகல் கானமும் எனுந்தொடரால் குறிஞ்சி, மருதம், முல்லை எனும் மூன்று நிலங்களும் கூறப்படுகின்றன. [69]

காலம் அல்லாத காலத்திலும் மரம் பயன் தந்ததாம் [134]

கதிரவன் வானின் கண்ணாம், அவன்கண் விழிப்பது விடியலாம். [257]

நின்று கண்ணாற் பார்க்கினும் கண்ணின் ஒளியைத் தன் அழகாலே வாங்கிக்கொள்ளும் இடமுண்டாகிய மலைக்காட்சி]368-369] நம்மை மயக்குகிறது.

புலிபாய்கையினாலே இறந்துபட்ட தன்பிணையை நினைத்து வெறுத்த கலை நின்று கூப்பிடுமாம் காட்டில்! [404–405]

நெருப்பினையொத்த செங்காந்தளினது மழையாலே செருக்கி வளர்ந்த புதிய முகையைத் தசையாகக் கருதி முகையென்று அறியா தெடுத்த பருந்து தசையன்மையால் தின்னாமல் எவற்றையும் சிந்திப்போக நெருப்பினையொத்த பல இதழ்கள் பரந்து வெறியாடு கின்ற களத்தை ஒக்கும் அகன்ற பாறைகள் இருந்தன. [145-150]

உவமையில் இயற்கை :

விறலியர் தம் சீறடி ஓடியிளைத்த நாயின் போக்குப் போல இருந்தது [43-44]

குளத்திலே புகுந்தது போன்ற பயனைத் தரும் குளிர்ந்த நிழல் [47]

புல்லிய கொடியினையுடைய முசுண்டை ஆகாயக் கார்த்திகை மீன் போல வெள்ளிதாக மலர்ந்தன [100-101]

விளையாட்டுப் போர் செய்யும் யானைக் கன்றுகளின் கை ஒன்றோடொன்று சேர்ந்தது போலத் தினைக் கதிர்கள் தம்மிற் பிணைந்தன [107-108]

அவரைகள் முற்றின தயிரினது பிதிர்ச்சி போலும் பூக்கள் உதிர்ந்து அடியிலே அரிவாளையொக்கும் வளைந்த காயைக் கொண்டன [109-110]

எருமை கிடந்தாற் போன்ற கற்கள் [111]

வரகுக்கதிர் வாதியின் கையிடத்து இணைந்த விரல்களை யொத்தது [9]

கரும்புகள் வேற்படை திரண்ட தானை கெட்டுப் போதலை உற்றது என்னும்படி காற்று மிகப்படுகின்ற ஆரவாரத்தாலே சாய்ந்தன [116-119]

வேல்யானையைக் குத்தியது போல வாழை மலை சூழ்ந்து நின்றது [129]

பலா மத்தளம் போன்றது [143-511]

செங்காந்தள் தீப் போன்றது [145]

தூங்கும் பாம்பு மரம் போன்றது [261]

கூடின பறவையொலி பலவாத்தியங்களை யொத்தது [269]

வேல் காய்ந்தது போன்றது கூர்ங்கற்பாறை [269]

யானைகள் தம்மிற் சேர்ந்து பொருதாலொத்த ஒன்றி னிடத்தே ஒன்று கூடி நெருங்கின கற்கள் காணப்பட்டன [384]

பொன்னை நறுக்கியது போன்ற நுண்ணிய அழகிய அரிசி [440]

குயவன் வனைகின்ற மட்கலத்திற் சக்கரம் போல நீர்க்குமிழி சுழலும் [474]

வளையுடைந்தன்ன வள்ளிதழ்க் காந்தள் [519]

மலைநீர் வென்றெழு கொடியில் தோன்றும் [581]

அடைமொழிகள் :

கண்ணகன் சிலம்பு [14], உயர்ந்தோங்கு பெருமலை [41], நல்யாறு [52], பேரிசை நவிரம் [82], கொடுந்தாள் முதலை [90], வியன்கண் இரும்புனம் [99], அகலிரு விசும்பு [100], கொழுங்கொடிக் கவலை [128], கருங்கனி நாவல் [135], நெடுந்தாளாசினி [139], நெடுமலையடுக்கம் [141], சிறுகட் பன்றி [153], சேந்த செயலை [160], இலக்குமலை [170], வழையமை சாரல் [181], நறுமலர் [182], நிரை இதழ்க்குவளை [183], விளைபுனம் [193], சுடர்ப்பூ இலஞ்சி [228], இருங்கால்வீ [265], பெருமரக் குழாம் [265], பாடின்னருவி [278], அறல் வாழ் கூந்தல் [304], நெடுவரை [310], கருவிரல் மந்தி [311], கடுங்கண் வேழம் [325], வள்ளிதழ்க்குளவி [334], வன்கோட் பலவு [337], வியன்கண் வெற்பு [351], பெருமலை [358], மைபடு மாமலை [361], கூர்ங்கற்பாறை [373], செங்கண்மரைவிடை [406], தேம்பட மலர்ந்த மராஅ [428], திரங்கு மரன் [431], செவ்வீ வேங்கை [434], புல்லரைக் காஞ்சி [449], தண்பணை நாடு [453], செங்கண் எருமை [472], பனிவார்கா [486], மடநடை ஆமான் [500], கொடுந்தாள் வருடை [503], வன்றலை மாத்தகர் [503], சிறு கட்டீர்வை [504], மடக்கண் மரையான் [506], மடக்கண் மஞ்ஞை [509], கவர்குரற் சேவல் [510], குரூஉப்புலி [517], வள்ளித்தழ்க் காந்தள் [519], நறுங்காழாரம் [520], கருங்கொடி மிளகு [521], திருந்தமை [522], நெடுவரை [524], தண்பெருங்காவிரி [527], தீந்தயிர் [523], வளமலியானை [530], கட்கின் சேயாறு [555], நெடுவெண்ணெலினரிசி [564]

புதுக் கவிதையின் இன்றைய போக்கு
[சென்ற இதழ் தொடர்ச்சி]

என்று தங்களின் விலையில்லாக் கவிமடல் என்று இதைப் பிரகடனப் படுத்திக்கொண்டு இதை வெளியிட்டனர். இப்படியெல்லாம் முற்போக்குச் சிந்தனையும், முழுச் சுதந்திரமும் கொண்டு கவிதை எழுதியவர்களின் படைப்புக்களின் பொருளை நேரடியாகப் புரிந்து கொள்ள முடிந்தது.

நா. காமராசன் பாடிய கவிதையை பார்க்கும்பொழுது, அவர் தனக்குப் பாடும் பொருளாக "புல்லை" எடுத்துக்கொண்டு எத்தனை அழகுடன் அதை நமக்கு அள்ளிக் கொடுத்தார் என்பதை, சுவைக்கும் போது உணரமுடிகிறது.

" வால் முளைத்த மண்ணே
வசந்தத்தின் பச்சை முத்திரையே
உடல மெலிந்த தாவரமே
உன்னை பனித்துளிகளின் படுக்கையறை என்பேன்
நஞ்சைத் தண்ணீரில் நனைந்து வளர்ந்து
நாள்தோறும் அறுவடையாகும் நாட்டிய புல்லே
பால்தரும் கால்நடைகளின் தின்பண்டமே
பச்சை நிறத்தின் விளம்பரமே

(முன் பக்கத் தொடர்ச்சி)

நக்கீரர், முடத்தாமக்கண்ணியார், நல்லூர் நத்தத்தனார், கடியலூர் உருத்திரங்கண்ணனார், பெருங்குன்றூர்ப்பெருங் கௌசிகனார் ஆகிய ஐவரும் வழங்கிய அழகிய ஆற்றுப் படைக் காட்சிகள் இன்புறுத்தும் தகையன; அறிவுறுத்தும் பெற்றியன. அழகு பற்றிய சிந்தனை என்றும் இன்பம் நல்கும் என்பார் கீட்சு. [Think of beauty is a joy for ever-Keats] ஆற்றுப்படை இலக்கியம் பயிற்சி கீட்சின் பொன்மொழிக்குச் சான்று பகரும் என்பதில் ஐயமில்லை

"பத்துப்பாட்டாதீ மனம் பற்றினார் பற்றுவரோ?
எத்துணையும் பொருட்கிசையா இலக்கணமில்
கற்பனையே"

என்று பேராசிரியர் சுந்தரம் பிள்ளை கூறுவது மிகையன்று.

வாழ்க பத்துப்பாட்டு

குசேலரின் உணவுக் களஞ்சியமே
குதித்தாடும் கடல்நீரைக் காதலிக்காமல்
உப்பு ருசி பெற்றுவிட்ட
ஓவியப் புல்லே"

இது ஒரு புதுவிதமான கற்பனைதான். சொல்ல வந்த கருத்தை பாமரனும் புரிந்துகொள்ளவேண்டும் என்னும், பண்டித நடைக்குப் பாய்விரிக்காமல் பாமரனுக்குக் கவரிவீசும் கவிதையாக வெளிவந்தது

கவிஞர் மேத்தா தமது கவிதையில் காதலைப்பற்றிப் பாடும் போது அந்த மென்மையரன உணர்வுகளை மேன்மையுற எடுத்துக் கூறும்விதம் போற்றுதற்குரிய ஒன்றாக அமைந்துள்ளது.

"ஆயிரம் கனவுகளை
உன்னை
யார் வளர்க்கச் சொன்னார்கள்
நீ ஏன் என்
நிழலோடு சண்டை பிடிக்கிறாய்"

என்று தன் காதலியிடம் கூறும்விதம் போற்றுதற்குரியது,

காதல் தோல்வியைப்பற்றிக் கூறும்போது அவர் கரைந்து போகிறார்.

"என் இதயத் தோட்டத்தில்
ரோஜாக்களைப் பயிரிட்டேன்
அறுவடை செய்ய
உன்னை அழைத்தேன்
அரிவாளோடு
நீ வந்த பிறகுதான்
என் தவறு எனக்குப் புரிந்தது"

என்று கூறும்போது அந்த மென்மையிலிருந்து தன்னை சிறிதும் மாற்றிக் கொள்ளாமல் கூறுகிறார்.

கவிஞர் வைரமுத்து தமது கவிதையில் தான் சொல்ல வந்த கருத்தை மிகவும் தெளிவுடனும், தீர்க்க தரிசனத் தோடும் நமக்கு அறிமுகம் செய்யும் ஆற்றல் போற்றுதற்குரிய ஒன்றாகும்.

காதலைப் பற்றிக் கூறும்போது,

"உன்னை நான் பார்த்திராவிட்டால்
என் கவிதை நோட்டு
... ...

உனது
ஒரே பார்வையில்
அரச இலையாக இருந்தவன்
தென்னங்கீற்ருய் கிழிந்தேன்''

தனது காதல் உணர்வுகளை உள்ளத்தை தொடும் வகையில் உயிர் கொடுத்த வைரமுத்து இன்று நமது சட்டசபையில் நடக்கும் நிகழ்ச்சிகளை இப்படி நையாண்டி செய்கிருர்.

'' இன்னும் கொஞ்ச நாளில்
அத்தனை சட்டசபைகளும்
ஆலயங்களாகலாம்
அங்கும்
செருப்போடு நுழைவது
தடை செய்யப்படலாம்"

இப்படி நேரடிப் பொருள் புரியவேண்டும் என்று எழுந்த புதுக் கவிதையின் அழகு போற்றுதற்குரிய ஒன்ருக அமைந்திருப்பது பெருமைப்படத் தக்கதாகும்.

அடுத்து தமிழன்பன் தமது கவிதையின் சிறப்பை அழகுடன், அமுத ஊற்றாக அருந்தி மகிழ அனைவரும் புரிந்து கொள்ளும் வகையில் அமைத்துள்ளார்.

'' அன்று
ஒரு மழை நாளில்
என் விழிகள் உன்னை
எனக்கு வழங்கியபோது
காலம் —
எனது சாளரத்தில்
பூக்களைப் பொழிந்தது
புன்னகைப் பூ பூத்தது''

என்று கூறி மென்மையுடன் காதலுக்கு உயிர் கொடுக்க முடிந்தது. இத்தனை அழகும், நயமும் தோன்றும் வகையில் சொல்ல முடிந்த புதுக்கவிதையை ஏனே சிலர் தங்களுக்கும், தங்களைச் சார்ந்தவர்களுக்கும் மட்டுமே புரியும் வகையில் எழுதுகிருர்கள்.

நாம் எதற்கு மரபுகளைவிட்டு புதுக்கவிதைக்கு வந்தோம் என்ற நோக்கம் இவர்களது போக்கினுல் அழிந்து விடுமோ என்று ஐயப் பட வேண்டியுள்ளது. எப்படி மரபுகளுக்கு விளக்கம்தேவையோ அதுபோல புதுக்கவிதைக்கும் ஒரு விளக்கம் கொடுக்கவேண்டிய கட்டம் வந்துவிடுமோ என்று எண்ணத்தோன்றுகிறது.

கவிஞர் புவியரசு தமது ''மீறல்" கவிதைத் தொகுப்பில் எழுதியுள்ள கவிதைகளை நாம் புரிந்து கொள்ளுதல் அரிது.

''ஆழங்கள் எனக்குள்
அகலங்களாகி விடுகின்றன
உயரங்களாகி விடுகின்றன"

இவற்றைப் படிக்கும்போது கவிஞர் என்ன சொல்ல வருகிறார் என்பதை நாம் அறிந்துகொள்வது சுலபமன்று.

இதைப்போன்றே கவிஞர் இன்குலாப் தமது கவிதையை முற்போக்கு எண்ணத்துடன் எழுதுகிறேன் என்று பிரகடனம் படுத்தும் இவர் கவிதை பாமரனுக்குப் புரியும் வகையில் அமையாமல் குறிப்பிட்ட ஒரு சிலருக்கே புரியும்வகையில் காணப்படுகிறது. இதைப் போன்றே அபியின் ''அந்தரநடையை" நம்மால் புரிந்து கொள்ள முடியவில்லை.

கவிஞர் கலாப்ரியாவின் ''மற்றாங்கே" கவிதைத் தொகுதியில் எழுதப்பட்ட கவிதைகள் அனைத்தும் ஒரு வக்ர உணர்வுடனும், பாலுணர்வுடனும் எழுதப்பட்டவை போல் காணப்படுகிறது. இவரது கவிதைகளைப் பற்றி புதுக்கவிதை எழுதும் தமிழவன் ''படிகள்" என்ற இதழில் விமர்சித்துள்ளார். இவர்களையெல்லாம் நாம் நோக்கும்போது புதுக்கவிதையின் இன்றையப்போக்கு எப்படி அமையும் என்று ஐயப்பட வேண்டியுள்ளது.

''கணையாழி'' ஆகஸ்டு இதழில் வெளிவந்த துவிஜனனம் என்னும் தலைப்பு வித்யாசமாக வுள்ளது. இதில் இவர் என்ன சொல்கிறார் என்று நமக்குப் புரியாத ஒன்றாக உள்ளது.

என்னை அறியாது
என் கண்கள்
புலனொடுங்கின
சூழல் மறைந்தது
நினைவுக்கொடி அறுந்தது
பிறந்த புது உடல்
ஈர்ப்பற்று
சூன்யவெளியில்
இரயத்தளவு
சூரியனாகித் துடித்தது

இதில் எதைச் சொல்கிறோம், யாருக்குச் சொல்கிறோம் என்ற நோக்கம் நம்மால் அறிந்து கொள்ள முடியாவண்ணம் சிறைபடுத்தியுள்ளார்.

"கணையாழி" ஜூலை இதழில் வெளிவந்த ஒரு கவிதை. இதில் எதைக் கூறுகின்றார் என்பது எமக்குப் புலனாகவில்லை.

"ராடார் தன்மை
இழக்கும் மார்புகள்
பொறுமையாய்
ரசிக்கத்தக்க வகையில்
பின்புறம் அமைந்த
அழகுகள்
பஸ்ஸில்
இடித்து வழி உண்டாக்கும்
முறைறாம் உறிப் கைப்பை
எழுந்து போன
நாற்காலியின் பின்
உதிர்ந்து கிடக்கும்
மல்லிப பூக்கள்

இதன் போக்கு இப்படி வளர்வதற்கு பொறுப்பு யார் என்பது நாம் அறியமுடியாத ஒன்று. கவிதை எழுத வேண்டும் என்ற நோக்கம் நமக்கு உடன்பாடே அது கவிதையாக இருக்கவேண்டும். இதன் உருவத்தில் உரைநடையைக் கூட மாற்றியமைத்து கவிதை என்று கூறும் மூன்றாம் தரக் கவிஞர்களின் போக்கினால் இதன் எதிர்காலம் எப்படி அமையும் என்று எம்மால் கூற முடியாவண்ணம் உள்ளது.

கவிஞர் மேத்தா அவர்கள் "தேவி" தீபாவளி சிறப்பு மலரில் இதற்கு மறுப்புக் கட்டுரை எழுதியுள்ளார். அது பின்வருமாறு:

"சுறுசுறுப்பாக முன்னேறி வரும் புதுக்கவிதைக்காரர்கள் ஒரு சுய பரிசீலனை செய்துகொள்ள வேண்டிய கட்டாயம் வந்திருக்கிற தென்பதை நாம் மறப்பதற்கில்லை.

எதிர்ப்பாளர்களின் தாக்குதலில் அகப்பட்டு இறந்துவிடாமல் புதுக்கவிதையைக் காப்பாற்றியாகிவிட்டது. இனிமேல், ஆதரவாளர் களின் நெரிசலில் அகப்பட்டு அழிந்துபோய்விடாமல் அதைக் காப்பாற்ற வேண்டிய கடமை நமக்குண்டு.

வர்ணஜால வார்த்தை வரணங்களும், கேட்பவரை பிரமிக்க வைக்கும் கிளுகிளுப்பு உத்திகளும் எதுகை மோனைகளைக் கட்டி யணைத்தபடி உருவகங்கள் போடும் குட்டிக்கரணங்களும் நவீனச் சொற்கள் சிலவற்றை மாற்றி மாற்றிப் போடும் நடையலங்காரங்

களும், துள்ளிக் குதித்தபடி வரும் துண்டு துணுக்குகளும் மற்றும் புதுக்கவிதையாகிவிடாது. சில சமயங்களில் மட்டுமே செய்ய வேண்டிய சிரசாசனத்தை எப்போதுமே தம்முடைய இயல்பென்று குறித்து வைத்து கொள்கிற கோமாளித்தனங்களிலும் புதுக்கவிதை இல்லை.

சத்தியமான கவிஞன் ஒருவனின் சரியான தரிசனத்திற்கு பிரசவம் பார்க்கும் பிள்ளைத்தாய்ச்சிதான் புதுக்கவிதை.

மொழி மாபுகள் என்கிற வலைகளிலும், வாழ்க்கை மரபுகள் என்கிற சிறையிலும் அகப்பட்டுக் கொள்ளாமல் கவிதா தேவியின் கர்ப்பத்தைக் காப்பாற்றுவது தான் புதுக்கவிதையின் வேலை.

இதைச் சரியரகப் புரிந்து கொள்ளாமல், புரிந்து கொள்ள முடிந்தாலும் பக்குவமாகப் பயன்படுத்தும் படைப்பாற்றல் இல்லாமல், ஆற்றல் இல்லாவிட்டாலும் பரவாயில்லை. அடக்கமுமில்லாமல் கோபுரங்கள் மேலே நின்று சில விடலைகள் குதிக்கத் தொடங்கினால் யாருக்குத்தான் கோபம் வராது என்று கூறி முடிக்கின்றார்.

எதனால் புதுக்கவிதை தோன்றியதோ அதன் போக்கில் பெரிய மாற்றத்தைக் காண்பதற்குள் சிலரது படைப்புகளின் மூலம் இவற்றின் போக்கு எப்படி அமையுமோ என்று கூற முடியாத வகையில் இன்றைய புதுக்கவிதையின் போக்கு அமைந்துள்ளது.

சான்றுக்குதவிய நூல்கள்

1. புதுக்கவிதையின் தோற்றமும், வளர்ச்சியும் ஆசிரியர் வல்லிக்கண்ணன்.
2. புதுக்கவிதை ஒரு திறனாய்வு — ஆசிரியர் செகனாதன்.
3. இலக்கியத் திறனாய்வு — ஆசிரியர் சு. பாலச்சந்திரன்.
4. படிகள்
5 கனையாழி
6. தேவி (தீபாவளிமலர்)
7. கண்ணீர்ப் பூக்கள்—ஆசிரியர் மேத்தா
8. இன்னொரு தேசிய கீதம்—ஆசிரியர் வைரமுத்து
9. கருப்பு மலர்கள்—ஆசிரியர் நா காமராசர்
10. ஒரு நாளைக்கு முந்தி—ஆசிரியர் தமிழன்பன்
11. மற்றாங்கே—ஆசிரியர் கலாப்ரியா

அணி இலக்கண ஒப்பீடு

இராசா முகமது, பி. ஏ.,

0.1. உலகியலில் வேறுபாடுகளுக்கிடையில் ஒழுங்கையும் அழகையும் கண்டுசுவைக்கும் மனப்பக்குவத்தில் இலக்கியம் முகிழ்க்கிறது. இலக்கியம் சிறப்பதற்கு அது எடுத்துக் கூறும் கருத்துக்களைப் போலச் சொல்லப்படும் முறையும் இன்றி யமையாதது. இலக்கியத்தின் வடிவம் அவ்விலக்கியத்திற்கு அமைக்கப்படும் எல்லைக்கோடு. அவ்வெல்லைக்கோட்டினுள் நின்று பொருளடக்கத்தைத் தெளிவாகவும், வலிவாகவும், அழகாகவும் எடுத்துச் சொல்ல அணி அவசியம்.

0.2. அணி என்பதற்கு அழகு அல்லது ஒப்பனை என்பது பொருள். ஓசையோடு கூடிய தேர்ந்த சொற்களால் அழகுபடுத்தும் திறமையே அணியாகும். கவிஞர் தாகூர் அணிபற்றி அளித்த விளக்கங்களைச் சுருங்கக் கூறினால் "பொருள்களில் வெளித் தோன்றும் வேற்றுமையைக் கடந்து ஒற்றுமையைக் காணும் மனத் தின் சாதனை" எனலாம்.

0.3. அணி இலக்கணத்தைப் பயில்வதால் திறனுறப் பேசவும் எழுதவும் சிறந்த நூலியற்றவும் முடியும். செய்யுளில் பொருள், நடை ஆகியவற்றின் நுட்பத்தை உணர்ந்து அனுபவிக்கவும், முடியும்.

1.0. தொல்காப்பியர் பொருளதிகாரத்தில் உவமையணிக்கு உவமையியலில் இலக்கணங் கூறியுள்ளார். மொழிவேறுபாடு, தேச வேற்றுமை கடந்து அழகுணர்ச்சியை முழுமையாக எழும்பச் செய்யும் மன ஊக்கமே அணி அமைப்பிற்கு மூலம் எனக் கண்டு கொண்ட தண்டியார், வடமொழி இலக்கண நூலான காவ்யா தர்சத்தில் சொல்லப்பட்டுள்ள அணிகளைத் தமிழிலக்கியத்தில் கண்டு, 'தண்டியலங்காரம்' யாத்தார் அதன்வழி ஆங்கிலம் தமிழ் ஆகிய இருமொழிகளுக்கும் பொதுவாகவும் இயல்பாகவும் அமை கின்ற ஆங்கில அணிகளை மட்டுமே பிமிழ்லக்கியத்தில் கண்டதன் விளைவே இந்த ஒப்பியல் கட்டுரை.

2.0. வேறுபட்ட பொருள்களிடையே ஒப்புமையைக் காட்டும் அணி உவமை அணியாகும். இவ்வொப்புமை அடிப்படையில்தான் பிற அணிகள் தோன்றுகின்றன. ஆகவே. உவமை அணியை முதலில் காண்போம்.

2.1 உவமை அணி (SIMILE)

ஒரு பொருளுடன் மற்றொரு பொருள் குணம், தொழில், பயன் இவைகளில் ஏதேனும் ஒன்றுடனாவது ஒத்திருப்பதாக உவமிப்பது உவமையணி. இதனை வடமொழியில் 'உபமாலங்காரம்' என்பர். இதுவே ஆங்கிலத்தில் 'Simile' எனப்படுகிறது.

(எ.டு) "**பாலொடு தேன்கலந்தற்றே** *பணிமொழி*
வாலெயிறு ஊறிய நீர்.

இக்குறளில் காதலனுக்குத் தான் விரும்பும் காதலியின் வாயில் ஊறும் எச்சில், பாலொடு தேன் கலந்த சுவையை உடையது என உவமிக்கப்படுகிறது.

உ.ம் "The accuser and the accused freely speak
High stomach'd are they both and full of ire
In rage, **deaf as sea, hasty as fire** "
–King Richard II Act I Sc, L 17.19

வாதியும், பிரதிவாதியும் ஒருவரையொருவர் குற்றம் சாட்டிக் குறைகூறும் வேகம் தீயைப் போன்ற விரைவினை உடையதாகவும் அப்பேச்சின் ஒலி கடலோசையைப் போலக் காது செவிடுபடும்படியாக உள்ளதாகவும் உவமிக்கப்படுகிறது.

3.0 வேறுபட்ட பொருள்கள் எங்களிடையே ஒப்புமை மிகுதிப்பட அவை இரண்டறக் கலந்து ஒருருவாகிறது. இத்தன்மையே உருவகமாதலின் அதனை அடுத்துக் காண்போம்.

3.1. உருவகஅணி (METAPHOR)

உவமிக்கப்படும் பொருள் உவமையுடன் வேறுபாடொழிந்து ஒன்ருகி விடுவது உருவக அணியாகும். இதனை வடநூலார் ரூபகாலங்காரம் என்பர். இது ஆங்கிலத்தில் Metaphor எனப்படுகிறது.

(எ-டு) "**காமக்கடல்** *மன்னும் உண்டே அது நீந்தும்*
ஏமப்புணை மன்னும் இல்."

இக்குறளில் காமம் கடலாக உருவகப்படுத்தப்பட்டிருக்கிறது.

(உ-ம்) "It is the east and *Juliet is the sun*
Arise, fair sun, and kill the envious moon
Who is already sick and pale with grief"
—Romeo and Juliet Act II Sc II 3:5

இங்கு ஜூலியட் கதிரோனாக உருவகப்படுத்தப்பட்டிருக்கிறாள்

4.0 அழகுணர்வில் கொண்ட மயக்கம் திணைமயக்கத்திற்கும் வழிகோலுகிறது. ஆதலின் அதனைக் காண்போம்.

4.1 திணைமயங்கணி (Personification)

அஃறிணைப் பொருட்களுக்கு உயர்திணைப் பண்புகளை (மனித உணர்வுகளை) ஏற்றிச் சொல்லும் அணி திணை மயங்கணி இதனை ஆங்கிலத்தில் 'Personifi cation' என்பர்.

(எ-டு) **"காற்றுறங்குது கானுறங்குது**
நானுறங்கவில்லை தோழி
பூவுறங்குது பொழுதுறங்குது
நானுங்கவில்லை தோழி" —திரைப்பாடல்

கண்ணதாசனின் திரைப்பாடலில் மனித உணர்வாகிய தூக்கம் காற்றிற்கும், கானகத்திற்கும், பூவுக்கும், பொழுதிற்கும் ஏற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது.

(உ-ம்) "How sweet *the moonlight sleeps* upon this bank"
The merchant of Venice Act V Sc I L 54.

நிலவொளி மனிதரைப் போல தூங்குவதாகச் சொல்லப்படுகிறது.

5.0 திணை மயக்கநிலையில் இயற்கை மனிதனின் இன்ப துன்பங்களில் பங்கெடுக்க இயலுமாதலின் அதனை அடுத்துக் காண்போம்.

5.1 அஃறிணை இரங்கணி [Pathetic Fallacy]

அஃறிணைப் பொருட்கள் மக்களின் இன்ப துன்பங்களில் ஈடுபாடு கொண்டு இரங்குவதாக அமையும் அணி அஃறிணை இரங்கணி. இதனை ஆங்கிலத்தில் 'Pathetic fallacy' என்பர்.

(எ.டு) **"ஆவழுத** *அதன்* **கன்றழுத**
அன்றலர்ந்த பூவழுத
புனல் புள்ளழுத, மாவழுத" —கம்பன்

இராமன் காடு சென்றதைச் சகிக்காமல் பசு, கன்று, பறவை, விலங்கினம், பூ முதலியன அழுதனவாம்.

(உ.ம்) "Her rash hand in evil hour Forth reaching to the fruit, she plucked, she eat *Earth felt the wound, and Nature from her seat, sighing* through all her works, gave signs of woe That all was last'
Paradise Lost Bk IX 780.84.

பூமிகாயமடைந்ததும், இயற்கை பெருமூச்செறிந்ததும் இயற்கை இரங்கணியாகும்.

60 மயக்கநிலையில் இறந்தவற்றையும் உருவகிக்கப்பட்ட அருவப்பொருள்களையும் அழைத்துப் பேசுதல் கூடுமாகலின் அதனைக் காண்போம்.

61 விளியணி [Apostrophe]

இறந்த, மற்றும் உருவகிக்கப்பட்ட அருவப் பொருட்களை விளித்துப் (அழைத்துப்) பேசுவதாக அமையும் அணி விளியணி இதனை ஆங்கிலத்தில் 'Apostrophe' என்பர்.

(எ.டு) ***"சாவே! உனக்கொரு நாள்***
சாவு வந்து சேராதோ
சஞ்சலமே நீயொரு நாள்
சஞ்சலத்தைக் காணாயோ" (ரோஜாவின் ராஜா)

மேற்கண்ட பாடலில் கவிஞர் சாவையும் சஞ்சலத்தையும் விளித்துப் பேசுகிறார்.

(உ.ம்) "Death be not proud than some have called thee
mighty and Dreadful thou art not so" –John Donne

மேற்காணும் அடிகளும் சாவை விளித்துப் பேசுவதாகவே அமைந்துள்ளது.

7.0. உருவகிக்கப்பட்ட அருவப்பொருள்களை விளித்துப் பேசுவது கவிஞன் நமக்களித்த வியப்பாகும். அவன் தன் வியப் புணர்வை வெளிப்படுத்த வியப்பணி காண்கிறான்.

7.1 வியப்பணி [Exclamation]

மனத்தில் எழும் ஆழ்ந்த உணர்ச்சிகளான துயரம், மகிழ்ச்சி' வியப்பு ஆகியவற்றை ஆன்றோர் வியப்படையத் தெரிவிக்கும் அணி வியப்பணியாகும். இதனை ஆங்கிலத்தில் 'Exclamation' என்பர்.

(எ. டு.) ***"துங்கமணி மின்போலும் வடிவத்தாள் வந்து***
தூங்காதே எழுந்தென்னைப் பாரென்று சொன்னாள்
அங்கதனில் கண்விழித்தேன் அடடாவோ! அடடா!!
அழகென்னும் தெய்வந்தான் அதுவென்றறிந்தேன்"
—அழகு பாரதியார்

அடடாவோ ! அடடா!! என்பது வியப்புணர்வாகும்.

(உ.ம்.) "*O, What a fall* was there my country men !
Then, I, and you, and all of us fell down"
Julius Caesar Act III Sc ii 190, 191

O What a fall- எவ்வளவு பெரிய வீழ்ச்சி என்பது வியப்புணர்வு

8.0 வியப்புணர்வுக்கு உள்ளதை மிகுத்துச் சொல்லுதலும் ஒரு காரணமாகலின் அங்ஙனம் மிகைப்படுத்தும் உயர்வு நவிற்சியணி காண்போம்.

8.1 உயர்வு நவிற்சியணி [Hyperbole]

கற்போர் வியந்து மகிழ, பொருள், குணம், தன்மை முதலியன உண்மையிலுள்ள நிலையைக் காட்டிலும் மிகப் பெரியதாக இருப்பதாகப் புனைந்துரைப்பது உயர்வு நவிற்சியணியாகும். இதனை வடமொழியார் அதிசயோக்தியாலங்காரம் என்பர்; ஆங்கிலத்தில் 'Hyperbole' என்பர்.

(எ.டு) ***''இந்திரனே போலும் இளஞ்சாத்தன் சாத்தற்கு***
மந்தரமே போலும் மல்ஆகம் ஆகத்தில்
தார் அருவி போலும் தார்மாலை அம்மாலை
ஏழுலகும் நாறும் இணர்".

—காரிகை மேற்கோள்

சாத்தன் அணிந்துள்ள மாலை ஏழுலகிற்கும் மணம் பரப்ப வல்லது என்பது உயர்வு நவிற்சி.

(உ.ம்) "In the river were dry, Iam able to
Fill it with my tears, if the wind were
Down, I could *drive the boat with my righs*"
Two Gentlemen of Verona Act II Sc iii 47-49.

ஆற்றைக்கண்ணீரால் நிரப்புவேன் என்பதும், படகைப் பெரு மூச்சால் ஓட்டுவேன் என்பதும் உயர்வு நவிற்சி.

9.0 மிகைப் படுத்தலுக்கு கவிஞனின் படிப்படியான கற்பனை வளர்ச்சிநிலை அடிப்படை யாகலின் அவ்வடிப்படையில் எழும் ஏணியான ஏறணி காண்போம்.

9.1 (ஏறணி LIMAX)

ஒருநிலை அல்லது பொருள் பற்றிப் படிப்படியாக உயர்த்திக் கொண்டு செல்லும் அணி ஏறணியாகும். வடமொழியில் இதனை ஸாராலங்காரம் என்பர் ; ஆங்கிலத்தில் 'limax' என்பர்.

(எ.டு) "காலை அரும்பிப் பகலெல்லாம் போதாகி
மாலை மலரும் இந்நோய்"

இக்குறளில் காதல்நோய் காலையில் அரும்பிப் பகலெல்லாம் வளர்ந்து மொட்டாகி மாலையில் மலர்வதாக வளர்ச்சிநிலை கூறப் பட்டுள்ளது.

(Eg:) "How *noble* in reason ! how *infinite* in faculties ! in form and moving how express and *admirable*! in action how like an *angel* in apprehension how like a *God* ! "

Hamlet Act II Sc ii 301-305.

இங்கு மனிதன் பகுத்தறிவில் உயர்ந்தவனாகவும், எல்லையற்ற திறமைகள் கொண்டவனாகவும், நடையுடை பேச்சு முதலியவற்றில் வியக்கத்தக்கவனாகவும், செயலில் தேவனாகவும், அறிவில் இறை வனுக் கொப்பானவனாகவும் படிப்படியாக உயர்த்திக் கூறப்படு கின்றான்.

10.0 ஏணியில் ஏறியவன் தரையில் இறங்கவேண்டியது இயல்பாதலின், அந்நிலை உணர்த்தும் இறங்கணி காண்போம்.

இறங்கணி [Anticlimax]

10.1 ஒரு நிலை அல்லது பொருள் உயர்நிலையிலிருந்து படிப்படியாக தாழ்ந்து வருவது இறங்கணியாகும். இதனை ஆங்கிலத்தில் Anticlimax என்பர்.

(எ.டு.) "கச்சிருக்கும்போது கரும்பானேன். கைக்குழந்தை
வச்சிருக்கும்போது மருந்தானேன் – நச்சிருக்கும்
கண்ணார் கரும்பானாக் காணவும் நான் வேம்பானேன்
அண்ணாமலையரசிற்கு. தனிப்பாடல்

இப்பாடலில் காதலனின் உள்ளத்தில் கரும்பாயிருந்தவள் மருந்தாகி, வேம்பானதாகப் படிப்படியான தளர்ச்சி கூறப்படுகிறது,

(உ. ம்.) I, who erst *contended*
With gods to sit the highest, arm now *constrained*
Into a beast, and, mixed with bestial shine "

Paradise Lost Bk IX 163–165.

கடவுளுக்குச் சமமாக உயர்நிலை அடைய விழைந்த சாத்தான் (கடவுளை எதிர்த்துப் புரட்சி செய்தமையால்) படிப்படியாகத் தன் உயர்நிலையிலிருந்து தாழ்ந்து இப்போது விலங்காகி (பாம்பாகி) புழுதியில் புரளும் நிலைக்கு வந்து விட்டதற்காக வருந்துகிறான்

11.0 பல்வேறு உத்திகளைக் கையாண்ட கவிஞன், விடை வேண்டா வினாவெழுப்பியும் தன் கருத்தை வலியுறுத்த வல்லவன் என்பதை உணர்த்தும் விடை வேண்டா வினா வணி காண்போம்.

11.1 விடை வேண்டா வினாவணி [INTERROGATION]

பதில் பெறுவதற்காக அல்லாமல் கவிஞன் தன் கருத்தை வலியுறுத்திச் சொல்வதற்காகத் தொடுக்கும் வினாவே விடை வேண்டா வினாவாகும். இதனை ஆங்கிலத்தில் Interrogation என்பர்.

(எ.டு) *"காலைக்குச்செய்தநன் றென்கொல எவன்கொல்யான்*
மாலைக்குச் செய்த பகை"

இக்குறளில் மாலைக்காலம் தலைவியின் பிரிவுத்துயரை மிகுதிப் படுத்த, மாலையே! உனக்கு நான் செய்த பகையென்ன? என அவள் வினவுகிறாள். இவ்வினா விடை தெரிந்து கொள்வதற்காக அல்ல. தலைவியின் பிரிவுத்துயரை வலியுறுத்தவே எழுந்ததாகும்.

(2-4) Can the son's eye behold him father bleed?
There's need for need, death for a deadly deed."
Taitus Andronicus Act V Sec, iii 65-66

தந்தையின் குருதி சிந்துவதை மைந்தனின் கண்கள், காணச் சகிக்குமோ? இதுவும் ஒரு விடை வேண்டா வினாவே.

12.0 இதுகாறும் ஒப்புமையில் தொடங்கி உணர்ச்சியின் வலிமையை நயம்பட எடுத்துரைத்த அணி வகைகளைக் கண்டோம் இனி சொல் வேற்றுமையில் துவங்கி பொருளாழத்தை லாவகமாக வெளிப்படுத்தும் பல திறப்பட்ட அணி வகைகளைக் காண்போம்.

12.1 முரண்தொடையணி ANTITHESIS

சொல்லாலும் பொருளாலும் ஒன்றுக் கொன்று முரண்பட்ட சொற்கள் தத்தம் பொருளையுணர்த்திச் செய்யுள் நடைக்குச் சுவை யூட்டுமாறு அமைவது முரண்தொடையணி இதனை ஆங்கிலத்தில் 'Antithesis' என்பர்.

(எ.டு) "உறங்குவது *போலுஞ் சாக்கா டுறங்கி*
விழிப்பது *போலும் பிறப்பு."*

இக்குறளில் உறங்குவது வழிப்பது முரண்பட்ட சொற்கள்

(உ-ம்) "Mine *honour lives* when his *dishonour dies*
Or my sham'd life in his dishonour lies"
King Richard II Act V Sc iii 70-71

Honour - dishonour } முரண்பட்ட சொற்கள்
lives —dies }

12. 2 முரண் உரையணி [Paradox]

மேலெழுந்தவாரியாகப் பாக்க முரணாகக் காட்சி அளிக்கும்படி முரண்பட்ட சொற்களால் தொடுக்கப்பட்ட பொருளாழமிக்க உண்மைக் கூற்று முரணுரையணியாகும். இதனை ஆங்கிலத்தில் 'Paradox' என்பர்.

(எ டு) பழங்கால இயற்கை *செய்யும்* புதுக்காட்சி *பருகு தம்பி*"
—அழகின் சிரிப்பு (பாரதிதாசன்)

இயற்கை பழமையுடையது. எனினும் இளமையும் வளமையும் மாறாதது. எனவே காண்பவர் கருத்துக்கேற்ற புதுக்காட்சிகளை நல்கவல்லது.

(உ-ம்) "A captive victor that hath *lost in gain*"
—The Page of Lucrece L 770

லுக்ரிசியாவை பலாத்காரத்தால் கெடுத்த பிர்க்குவினஸ் தன் முயற்சியில் வெற்றி கண்டான். எனினும் அது அவனது மரியாதைக்கு ஏற்பட்ட இழப்பாகும். "இழிசெயலில் பெற்ற வெற்றி தோல்வியே" என உணர்த்துவதால் இது முரணுரையாகும்,

12. 3 முரணழியணி [Oxymoron]

சொல்லாலும் பொருளாலும் முரண்பட்டவற்றை பாவலன் சொல்லவரும் கருத்தோடு பொருந்தும்படி இணைப்பது முரணழியணி இவ்வணியில் முரண்பாடு உண்டாகி அழிந்துவிடுகிறது. இதனை ஆங்கிலத்தில் 'Oxymoron' என்பர்; வடமொழியில் 'விரோதபாஸாலங்காரம்' என்பர்.

(எ.டு) "காலையும் மாலையும் *கைகூப்பிக் கால்* தொழுதால்
மேலை *வினையெல்லாம்* கீழவாம் - *கோலக்*
கரு*மான்றோல்* வெண்ணீற்றுச் செம்மேனிப் பைந்தார்ப்
பெருமானைச் *சிற்றம் பலத்து*"

காலை - மாலை தொழுதல் என்பதிலும்
மேல் -- கீழ் ஆதல் என்பதிலும்

கருமை, வெண்மை, பசுமை, செம்மை பெருமான் என்பதிலும் பொருந்துகின்றன.

(உ.ம்) "Beautiful tyrant *fiend Angelical*
Dove. feathered raven ! *wolfish ravening lamb* !
Despised substance of divenest show !
Romeo and Juliet Act III Sc II L 75.77

ஜூலியட்டின் காதல் உள்ளத்திற்கு ரோமியோ தேவதூதனின் தோற்றம் உடையவனாயும் ஆட்டுக்குட்டி, புறா முதலிய வைகளின் குணங்கொண்டவனாயும் காட்சி தருகிறான். ஆனால் (அவளுடைய உறவினான டைபால்டைக் கொன்றமையால்) அவளுடைய துயருற்ற உள்ளத்திற்கு துர்தேவனின் தோற்றம் கொண்டவனாயும் கழுகு ஓநாய் இவற்றின் குணங் கொண்டவனாயும் தோன்றுகிறான். இவ்விரு முரண்பட்ட நிலை களும் ரோமியோவிடம ஒரு சேரக் காணப்படுவதால் முரண் மறைந்து விடுகிறது.

குறிப்பு

முரண்தொடையணியில் முரண்பட்ட சொற்கள் அடுத்தடுத்து வராமல் வாக்கியத்தை சமநிலைப்படுத்தப் போதுமான இடைவெளி விட்டு தம் பொருள் குறித்து நின்றன. முரணுரையில் முரண்பட்ட சொற்கள் நின்ற நிலையால் பொருள் குற்றமுடையது போல் தோன்றி உரைக்கும் வண்ணம் அமைந்து ஆழ்ந்த உண்மையை நிலை நிறுத்துகின்றன. முரணுரையில் முரண்பட்ட சொற்கள் சொற்சேர்க்கை ரச வாதத்தால் சொல்லவரும் கருத்தோடு இணைந்து தம் முரண்பாடுகளை இழந்தன.

13.0 சொல் வேற்றுமையால் விளைந்த இன்பம் சொல் விளையாட்டாலும் விளையவல்லதென்பதை விளக்கும் சிலேடை யணி காண்போம்.

13.1.1. சிலேடையணி (Pun)

ஒரு வகையால் நின்ற சொற்றொடர் இரு பொருள்பட வருவது சிலேடையணி. இதனை இரட்டுற மொழிதல் எனவும் கூறலாம். இதனை ஆங்கிலத்தில் 'Pun' என்பர்.

(எ. டு.) "ஆடிக் குடத்தடையும் ஆடும்போதே இரையும்
மூடித்திறக்கில முகங்காட்டும். ஓடிமண்டை
பற்றில் பரபரெனும் *பாரில்* பிண்ணாக்குமுண்டாம்
உற்றிடு பாம்பெள்ளெனவே யோது. — காளமேகம்

பாம்புக்கும் எள்ளுக்கும் இப்பாடல் சிலேடையாக அமைந் துள்ளது.

(உ. ம்) I had rather bean with you than bear you, yet I should *bear no cross* if I did bear you for I think you have no money in your pense".
As you Like It. Act II Sc iv 9-12

bean no cross < துன்பமில்லை காசில்லை.

cross < சிலுவை ஆங்கில நாணயம்.

13.2.0 சொல் விளையாட்டில் சொல்லால் விளையும் பொருள் அதனுடன் தொடர்புடைய பிறிதொன்றிற்கு ஆகிவரும் ஆகுபெயரணி காண்போம்.

13.2.1. ஆகுபெயரணி (Synecdoche + Metonymy)

பெயர்ச்சொல் அதனுடன் தொடர்புடைய பிரிதொன்றிற்கு ஆகிவருவது ஆகுபெயரணி. தமிழில் ஆகுபெயர் சொல்லிலக்கணக் கூறாக வந்துள்ளது. ஆங்கிலத்தை ஒட்டி இங்கும் அணியாகக் கொள்ளப்பட்டது. சினையாகுபெயரும், இடவாகுபெயரும்,முதலாகு பெயரும் ஆங்கிலத்தில் 'synecdoche' (பகுதி முழுமைக்கும், முழுமை பகுதிக்கும் ஆகிவரும்) எனவும், பிற ஆகுபெயர்கள் 'Metonymy' (தொடர்புடையவைகளுக்கு ஆகிவருவன) எனவும் அழைக்கப் படுகின்றன.

(எ.டு) *"உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பலகற்றும்*
கல்லார் அறிவிலாதார்"

இக்குறளில் உலகம் உலகமக்களுக்கு ஆகிவருவதால் இடவாகு பெயர்.

(உ.ம்) "The *pen is* mightier than the *sword*"

எழுதுகோல் எழுத்தாளனுக்கும், வாள் வீரனுக்கும் ஆகி வருகின்றன.

13.3.0 வாதத்திறமையால் சொல்லவந்த கருத்தை ஆழமாக வலியுறுத்த அதனெதிர்பதத்தை மறுத்துரைக்கும் எதிர்ப்பத மறுத்துரையணி காண்போம்.

13.3.1 எதிர்ப்பத மறுத்துரையணி (Litotes)

சொல்லவரும் கருத்தை மிக அழுத்தமாக வலியுறுத்தும் பொருட்டு நேரடியாகச் சொல்லாமல் அதற்குரிய சொல்லின் எதிர்ப் பதத்தை மறுத்துரைக்கும் அணி எதிர்ப்பத மறுத்துரையணியாகும். இதனை ஆங்கிலத்தில்'Litotes'என்பர்.

(எ.டு) *"கள் வலனைக் கோறல் கடுங்கோலன்று"*

—சிலம்பு

இங்குக் கடுங்கோலன்று என்பது செங்கோல் என்ற பொருளில் வந்துள்ளது.

(உ.ம்) "To my mind thaough I am a native here
And to the manner born, it is a custom
More bonoured in the breach than the observance".
Hamlet Act I Sc iii 14-16

இங்கு வழக்கமாகக் கடைப்பிடிக்கப்பட்டு வரும் 'குடித்து விட்டு களியாட்டங்களில் ஈடுபடும் செயல் இழிவானது என்ற கருத்தை, அதன் எதிரிடையாக அம்மரபை உடைத்தெறிவது மேன்மையான செயல் என்று கூறி உணரவைக்கிறார் ஆசிரியர்.

13.4.0 சொற்சிலம்பால் கடுமையான கருத்தை மென்மையாக்கி விந்தை புரியும் மங்கல வழக்கணி காண்போம்.

13.4.1 மங்கல வழக்கணி Euphemism

சொல்லவரும் துயர அருவருப்புச் செய்திகளின் கடுமையைக் குறைத்து மென்மையாகச் சொல்லும் அணி மங்கல வழக்கணி. இதனை ஆங்கிலத்தில் 'Euphemism' என்பர். தமிழில் வழக்கு நிலையில் நின்ற மங்கல வழக்கு ஆங்கிலத்தை ஒட்டி இங்கு அணியாகக் கொள்ளப்படுகிறது.

(எ டு) *"தென்னவன் தீதிலன்
தேவர்கோன் தன்கோயில்*
நல்விருந் தாயினன்" —சிலம்பு.

இங்கு மன்னன் இறந்த செய்தி தேவர்க்கு நல்விருந்தாயினன் என மங்கலமாகச் சொல்லப்படுகிறது.

(உ.ம்) "Unhand me, gentlemen
By heaven, I will *make a ghost* of him that lets me
Hamlet Act I Sc IV 84. 85ர்

இங்கு சாகடிப்பேன் என்பது ஆவியாக்கிவிடுவேன் எனச் சொல்லப்படுகிறது.

14. 0 சொல்லவந்த கருத்னத மறைபொருளாக உணர்த்தும் மறைபொருளணி காண்போம்.

14.1 மறைபொருளணி (Irony)

உணர்த்த வேண்டிய கருத்துக்குச் சுவையூட்ட அக்கருத்தை வெளிப்படையாகச் சொல்லாமல் எதிர்ச்சொல்லாலும் தொனியாலும் உய்த்து உணரவைக்கும் அணி மறைபொருளணி. இதனை ஆங்கிலத்தில் 'Irony' என்பர். இவ்வணி வஞ்சகமாகப் புகழ்வதற்கு

மிருதியும் பயன்படுகின்றமையால் இதனை வஞ்சப்புகழ்ச்சியணி என்பாருமுளர். இவ்வணி நாடகத்தில் செயல்படும்போது இதனை நாடக மறைபொருளணி 'Dramatic Irony' எனலாம்.

(எ. டு.) *"இவ்வே பீலியணிந்து மாலை சூடி*
கண்டிரணோன் காழ்திருத்தி நெய்யணிந்து
கடியுடை வியனகரவ்வே" — புறம் 95.

இப் பாடலில் ஔவையார் தொண்டைமானின் படைக்கலங்கள் பயன்படாது இருக்கும் தன்மையைச் சொல்லாலும் தொனியாலும் எள்ளி நகையாடுகிறார்.

(உ ம்.) 'Yet Brutus says he was ambitions
And sure he is an honourable man."
Julius Ceasar Act III Sc ii 98-99.

இங்கு ஆண்டனி, புருட்டஸ் (தவறான கண்ணோட்டத்துடன்) சீசரைப் பேராசைக்காரன் எனக் குற்றஞ் சுமத்துவதால், தன் மேன்மையிழந்தான் என்ற கருத்தை சொல்லாலும் தொனியாலும் மறைபொருளாக உணர்த்துகிறான்.

142. நாடகமறை பொருளணி (Dramatic Irony)

நாடகமாந்தர் உபயோகிக்கும் சொற்றொடர் நாடகமாந்தருக்கு ஒரு பொருளையுணர்த்த அப்பொருளுடன் நாடகத்தைக் காண்பவர்க்கு வேறொரு மறைபொருளும் தொனிக்க அமைவது நாடகமறை பொருளணி 'Dramatic Irony' ஆகும்.

(எ.டு.) "*மாறி வருவன் மயங்காதொழிக* —சிலம்பு

நாடகக் காப்பியமான சிலம்பில், கண்ணகியிடம் சிலம்பைப் பெற்ற கோவலன், அதனை மாறி வருவன் (விற்று வருவேன்) என்ற கூற்று. அந்நாடகத்தைத் துய்ப்பவர்க்கு அப்பொருளுடன் கோவலன் சிலம்பு காரணமாக கொலையுண்டு உருமாறி வருவன் என்ற பொருளையும் உணர்த்துகிறது.

(உ ம்) "Were he my brother may my kingdom's heir"
King Richard II Act I Sc i 116

இரண்டாம் ரிச்சர்டு மன்னன் மாப்ரே என்ற பிரபுவிடம், உன்னுடன் போராடும் பாலிங்புருக் எனக்குச் சகோதரனே என்றாலும் இந்த அரியணைக்குரிய வாரிசல்ல என்ற கூற்று, அந்நாடகத்தைக் காண்பவர்க்கு பின்னர் பாலிங்புருக் நான்காம் ஹென்றி மன்னனாக அரியணைக்கு வரஇருப்பதை நினைவு படுத்துகின்றமையின் இதுவும் நாடகமறைபொருளணியே.

15.0 இறுதியாகக் கவிஞன் பொறுப்புணர்ச்சியை வெளிப்படையாகவும் நயம்படவும் எடுத்துரைக்கும் வசைமொழியணியைக் காண்போம்.

15.1 வசைமொழியணி (Sarcasm)

கவிஞன் தனக்குப் பகையானவரையும்,அவமதிப்புச் செய்தவரையும் பழிதீர்க்கப்பொழியும் நாசூக்கான வசைமொழியே வசைமொழியணியாகும். இதனை ஆங்கிலத்தில் 'Sarcasm' என்பர்.

(எ.டு) *"எட்டேகால் லட்சணமே ஏமனேறும் பரியே*
மட்டில் பெரியம்மை வாகனமே—முட்டமேல்
கூரையில்லா வீடே குலராமன் தூதுவனே
ஆரையடா சொன்னாய் அது.'' —ஔவையார்

கம்பரை ஔவையார் அவலட்சணமே, எருமையே, கழுதையே, குட்டிச்சுவரே, குரங்கே என நேரடியாகத் திட்டாமல் எட்டேகால் லட்சணம் ஏமனேறும்பரி, பெரியம்மை வாகனம், கூரையில்லாவீடு, குலராமன் தூதுவன் என நாசூக்காக வசைபாடுகிறார்.

(உ.ம்) "A man so various that he seemed to be
Not one, but all mankind's epitome ;
Stiff in opinion always in the wrong
Was everything by starts and nothing long
But in the course of one revolving moon
Was chymist, fiddler, stalesman and buffoon
—Absalom and Achitophel 545-550

இங்கு டிரைடன் அகிடஃபெல் அணியைச்சேர்ந்த பக்கிங்ஹாம் பிரபுவைத் தவறான கொள்கையாளன் நிலையற்றவன் என நேரடியாகத் திட்டாமல் தவறான கொள்கைகளிலேயே என்றும் பிடிப்புடையவனென்றும், நிலவின் ஒரு சுழற்சி காலத்திற்குள் ராஜதந்திரி முதல் கோமாளி ஈறாக பல்வேறு தரத்தினர் ஈடுபடுங் காரியங்களைச் செய்யும் அமர்த்தன் என நையாண்டி செய்கிறார்.

பெரியகுளத்தின்[1] நன்கொடை
வராகநதி

(புலவர். து. இராசகோபால்)

"சிறு இதயத் தூற்றெடுத்து மேனி எங்கும்
செழிப்பதற்குக் கிளைத்தோடும் குருதி யைப்போல்
ஆறு கிடத்தே தோன்றிப் பின் நாட்டில் செல்வம்
கொழிப்பதற்குக் கிளைத்தோடும் ஆறு, வெற்பில்
வீறு விறுக்க அருவியெனப் பாறை மீது
வீழ்வது கல்லாகி ஓட ஓடக்
குறுமணலாய் ஒன்றுதிரிந் தொன்றாம் என்ற,
குவலயத்தின் பரிணாம உண்மை காட்டும்." [2]

ஆறு பற்றிப் பெரியகுளத்துக் கவியரசர் முடியரசனாரின்[3] கவிதை இது. 'ஆறில்லா ஊருக்கு அழகில்லை' என்பது பழமொழி. ஆற்றின் நடையழகை இலக்கிய அடிகள் பல நூல்களில் சிறப்பாகப் பேசுகின்றன.

நிலவியலும் ஆற்றின் வகைகளும் :

நிலவியலார் ஆறுகளை, எப்போதும் நீரோடும் ஆறுகள் [Permanent Rivers] இடைக்காலம் விட்டு நீரோடும் ஆறுகள் [Intermittent Rivers] எப்போதாவது நீரோடும் வரண்ட ஆறுகள் [Ephemeral Rivers] என்றெல்லாம் எடுத்துக் காட்டுவர். [4]

வரலாற்றில் ஆறு :

உலகின் முதிர்ந்த நாகரிகங்களுக்கு, ஊற்றுப் பொருக்காகத் திகழ்வது ஆறுகளும், அதன் படுகைகளுமே யாகும். ஆற்றங்கரை யோரங்களில் புகழ் பெற்ற ஊர்கள் பல இருந்தன. "தென்னாட்டுப் பெரியாறுகளின் பள்ளத்தாக்குகளில் முதன் முதல் நடைபெற்ற நிகழ்ச்சிகளை அடிப்படையாக வைத்து, இந்திய வரலாற்றைத் தொடங்கி முறைப்படி வரைதல் வேண்டுமென்பது, மனோன்மணீ கண்ட சுந்தரனாரின் [5] தணியாத தாகமாகும்.

இந்நிலையில் எப்போதும் நீரோடும் ஆறுகள் என்ற வரிசை யிலும் ஆற்றின் பெருமையால் அழகூட்டியும், பெருமை மிக்க பேரூரான பெரியகுளம் நகரின் வாழ்வியலுக்கு வழிகாட்டியாகவும் திகழ்ந்து, இவ்வூரினை வடகரை, தென்கரையென இருவகைப்

படுத்தி மெல்லெனவே நெளிந்தோடும் சிறப்பினை, நெடுகக் காட்டிச் செல்லும் ஆற்றிற்கு ''**வராகநதி**'' என வடமொழிப் பெயர் தந்தனர் முன்னோர். இப் பெயர் தாங்கி மற்றும் ஓர் ஆறு திருநெல்வேலி மாவட்டத்தில் பாப்பாங்குளம் என்னும் ஊரின் தென்புறத்தில் செல்கிறது[6].

பன்றி மலை

பழனிமலைத் தொடர் நீண்டு நிற்பது. அகன்றது. இதன் தெற்கில் உள்ளது பன்றிமலை. அதன் அடுக்குகளில் ஒன்றாக அமைந்திருப்பது. இது பெரியகுளத்திற்குத் தென்மேற்குத் திசையில் காணக்கூடியது.

அந்நாளில் பழனிமலைத் தொகுதி பண்ணி எனும் தலைவனுக்கு உரியதாக இருந்தது. இம்மன்னனை "வரை நிலையின்றி இரவலர்க்கீயும் வள்வாய் அம்பின் கோடைப் பொருநன் பண்ணி"[7] என்று அகப்பாடல் ஒன்று பாராட்டும்.

இப்புரவலனுடைய ஆட்சிக்குட்பட்ட இம்மலை, பண்ணிமலையெனப் பெயர் பெற்றது. இவனுடைய ஆளுகைக்குட்பட்ட ஊர் பண்ணிக்காடாக விளங்கிற்று. அதுவே பண்ணிமலை, பன்றிமலை பண்ணிக்காடு, பண்ணைக்காடு என்றெல்லாம் திரிந்தன என்பாருளர்.[8]

இனி — வராஹம் — பன்றி, வராஹமலை — பன்றிமலை, க்ரோடம் — பன்றி, க்ரோட மலை — பன்றிமலை என்றும் பிற்காலத்தே எழுந்த பெரியகுளத்துத் தலபுராணம்[9] பன்றிமலையைப் பற்றித் துணைக் கதைகள் பலவற்றை இணைத்துக் கூறுகிறது.

வராகநதியின் தோற்றமும் - பிறதகவல்களும் :-

தென்மேற்குப் பருவக் காற்றால், வளம் பெறும் மேற்குத் தொடர்ப்பகுதியில் பிறந்து, அடர்ந்த காடுகளின் வழியாய் ஊடுருவி, கீழே இழிந்து விளையாடி வரும்போது, பன்றியாறு, கேழல் ஆறு, ஏனம் ஆறு[10] எனப் பல்வேறு தமிழ்ப் பெயர்களுடன் 1929 ஆம் ஆண்டில் வெளியான திருவருண்மாலை[11] எனும் நூலில் இடம் பெற்றாலும், சங்க நூல்களில் எங்கும் இவ்வாறு குறிப்பிடப் படவேயில்லை. கல்வெட்டுகளிலும் காட்டப்படவில்லை.

ஆயினும், பின்னர் எழுந்த பெரியகுளம் தலபுராணம் மூங்கிலணைத் தலபுராணம்[12] ஆகியவற்றுள் பல்வேறு புனை கதைகளால் இதன் பெருமைகள் எடுத்துச் சொல்லப்படுகின்றன.

எந்நாளும் நீரோட்டம் கொண்டு விளங்கும் இவ்வாறு, கல்லாறு, பாம்பாறு ஆகிய சிற்றாறுகளைத் தனக்குத் துணையாக்கிக் கொள்ளுகிறது.

இவற்றுள் கல்லாறு, ஊருக்கு வடமேற்கில் குப்பான் பாறைக்குப் போகும் வழியிலுள்ள கன்னிமார் சுனை எனுமிடத்தில் கூடுகிறது.

கொடைக்கானலிலிருந்து புறப்பட்டு வரும் பாம்பாறு பங்களாபட்டி என்ற சிற்றூருக்கு அருகண்மையில் இந்நதியுடன் சங்கமமாகி,முடிவில் தமிழ்கண்டதோர் வையைக்குக் கைகொடுத்துக் கடலில் கலக்கிறது.

சோழன் பூர்வபட்டயம் கூறுவது என்ன?

''அவர் நிகுதி செய்த பின்பு, சேரமாம் பெருமாள் என்னும் சேரன் கரிகாலச் சோழனுக்கும், சமயமுதவி, சடையப்பன், கத்தூரி, ரங்கப்பச் செட்டிக்கும், உடுபறை, பாக்கு, வெற்றிலையும் கொடுத்து அவர்களும் தானுமாகப்'' பண்ணிமலை வாசத்திலுள்பட்டவராக நதியும், வேங்கைநதி, இடபநதி, அனுமன்நதி, ஆளுநதி ஆக இந்த பஞ்சநதியும்........என்று நீண்டு செல்கிறது.[13]

இவற்றால், வராகநதி – பண்ணிமலைக்கு உட்பட்டதென்றும், பஞ்ச நதிகளுள் ஒன்றாகத் தன்னைத் தக்கவைத்துக் கொண்டு விளங்குவது என்பதும் பெறப்படும்.

பிணியகற்றும் பெருமை :

இந்நதியில் ஊறிவரும் நீர், மலையிலிருந்து இறங்கி வரும் போது, பல்வேறு மருந்துச்செடி, கொடி, மரங்களைத் தழுவி வருவதால் இதற்குத் தனிச் சக்தி உண்டு. அவற்றால் பல நோய்களைக் குணப்படுத்தும் மருத்துவத்தன்மை கொண்டிலங்குவதை இன்றும் அறியலாம்.

இந்நாளிலும் இராசேந்திர சோழீச்சுரமுடைய நாயனார் திருக்கோயில் [பெரியகோயில்] நீர்த்துறையிடத்தே பன்னெடுங்காலத்திற்கு முன் எழுந்த மருத மரங்களுக்கிடையே தொட்டு வரும்குளிர் நீரில் நாள்தோறும் அதிகாலையில் முழுக்காடினால் எப்பேர்ப்பட்ட பிணிகளும் நீங்குமெனப் பல பெரியவர்கள், சொல்லக் கேட்டிருக்கிறேன். என்னுடைய வாழ்க்கையிலும் அதன் பலனைக் கண்டிருக்கிறேன்.

அகன்று, மிக்க திண்மையுடன் பரவி விளங்கும் அம்மருத மரத்தைக் காணும் போதெல்லாம்,

''அந்த இடை மருதின்
ஆனந்தத் தேன் சொரியும்
பொந்தைப் பரவீ நாம்
பூவல்லி கொய்யாமோ''

என்ற பாடல் நம் நெஞ்சில் நிழல் போல் படிகிறது.[14]

கோபமும் கொந்தளிப்பும்

மூன்று பாலங்களைக் கொண்டு பெருமை பெற்ற, இந்நதி 1922–1925 ஆம் ஆண்டுகளில்[15] மிகப் பெரிய வெள்ளப்பெருக்கு களைக் கண்டிருக்கிறது. அக்காலத்தில் தன் கோபத்தையும் மிகுதி யாகவே காட்டியிருக்கிறது. அதன் விளைவாக ,முன்பிருந்த ஆடு பாலம் ஒருமுறை அழிவுக்கு உட்பட்டது.

பொறுமைக்கு ஓர் எடுத்துக்ககாட்டு :-

பெரிய குளத்தின் நன்கொடையென விளங்கும் இந்த வராக நதியின் பொறுமை,

'' ஊர் மக்கள் வெறுத்தொதுக்கும் கழிநீர் எல்லாம்
ஓடிவந்து கலந்தாலும் மாசு நீங்கி
ஊர்விட்டு நீங்குகையில் தூய்மை யாகி
ஊர்ந்துசெலும் ஆறு 16

எனக் கவியரசரின் கவிதைக்கு இலக்கணமாக விளங்குவதை இன்றும் காணலாம்.

முடிவுரை :-

மணி நீரும் – மண்ணும் – மலையும் – அணிநிழற்காடும் அரண் களெனத் திகழ்ந்து விளங்கும் பெரியகுளத்தின் பெருமைக்கு மேலும் எடுத்துக்காட்டாய் விளங்கும் இவ்வராகநதியின் பெருமையை விரிப்பின் பெருகும்.

தகவல் பலகை

1.	பெரியகுளம்	மதுரை மாவட்டம்
2.	கவிஞர். முடியரசன்	முடியரசன் கவிதைகள். – ஆறு பக் 28
3.	கவிஞர். முடியரசன் இக் கட்டுரையாசிரியர்க்கு அத்தை மகனார்	
4.	தமிழ்நாட்டுப்பாடநூல் நிறுவனவெளியீடு	தமிழ்நாடு – தொல் - பழங்காலம் பக்–46
5.	K. K. பிள்ளை	தென் இந்திய வரலாறு-பக்-2
6.	வித்துவான். கோ. வே. பெருமாள்	பொருநைவளம் - பக் 46
7	அகம் – 13	
8.	தெ. பொ. மீ. மணிவிழா மலர் பக் – 450	
9.	பன்மொழிப்புலவர். திரு. கு. வே. சேஷாஷல சர்மா அவர்களின் பெரியகுளம் தலபுராணம் கையெழுத்து ஏடு	
10.	மதுரஞ்சுந்தரபாண்டிய ஓதுவார்	பெரியகுளமென்னும் திருக் குழந்தை முருகக்கடவுண் மீது திருவருண்மாலை - பக் 3
11.	,,	,,
12.	மு. காளிதாசு	மூங்கிலணைத் தலபுராணம் (அச்சுநூல்)
13	அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம் வெளியீடு	சோழன் பூர்வபட்டயம்-வரிசை 5 பக் 68
14.	அ. சம்பந்தமூர்த்தி	வைகைக் கரையினிலே - பக் 37
15.	பெரியகுளம் நகராட்சி	வைரவிழா ஆண்டு மலர் (1886-1946) பக்–29
16.	கவிஞர் முடியரசன்	முடியரசன் கவிதைகள் ஆறு பக்-29

திருவள்ளுவர் வகுத்த
'ஆராய்ச்சி நெறிமுறைகள்'

திருக்குறள் சித்தர்
டாக்டர் க. த. திருநாவுக்கரசு.

இன்றைய உலகம் அறிவையே தெய்வமாகப் போற்றி வணங்குகிறது இதன் விளைவாக 'அறிவுமுதல் கொள்கையே' இன்றைய சிந்தனை உலகில் முதலிடம் பெறுகிறது. எங்கும், எதிலும் கருத்தைச் செலுத்துவதற்கு முன்னரே, 'ஏன் ?— எதற்காக?' எனும் கேள்விகள் எழுப்பப்படுவது ஒரு பொதுமை இயல்பாக ஆகிவிட்டது. இதனைப் 'பகுத்தறிவுவாதம்' என ஒரு சாரார் கூறுவர். மற்றொரு குழுவினர், 'அறிவியல் வளர்ச்சியால் உண்டான ஆராய்ச்சி' மனப்பான்மை என்பர்.

இதிலிருந்து ஓர் உண்மை புலனாகின்றது. இந்த நூற்றாண்டு வரை காணப்படாத அளவிற்கு இந்த இயல்பு, இன்று முனைப்பாகத் தோன்றுவதற்கும் பரவலாகப் பேரளவிற்குப் பெருகி வருவதற்கும் 'அறிவியல் அறிவு' மக்களுடைய சிந்தனையில் உண்டாக்கியுள்ள தாக்கமேயாகும்.

நெடுங்காலமாக நாம் கற்ற கல்வி முறையில் பெரிதும் தொகுப்பு வழிப்பட்ட நிலையில் (Inductive reasoning) முடிவுகளையும் உண்மைகளையும் காண்பது வழக்கமாக இருந்தது. இலக்கணத் துறையில் மட்டுமே ஓரளவிற்குப் 'பகுப்புவழி' ஆய்வுமுறை (Deductive reasoning) பயன்படுத்தப்பட்டு வந்ததாக காணுகின்றோம்.

மேற்கு நாட்டுக் கல்விமுறையை ஏறக்குறைய எண்பது ஆண்டுகளாக இந்த நாட்டு மக்கள், பரவலாகப் பெற்றுள்ளனர். மேற்கு நாட்டுக் கல்விமுறையில் பல குறைபாடுகள் உள்ளன என்பது உண்மை. ஆனால், காரணகாரியத் தொடர்பு வழிப்பட்ட அறிவியல் சிந்தனை மேற்கு நாட்டுக் கல்வி முறையில் முக்கிய இடம் பெறும் 'அறிவியல்' படிப்பு முறையின் விளைவே என்பதை மறுக்க இயலாது.

அறிவியல் ஆய்வுமுறையில் கூர்ந்து நோக்குதல்,(observation) கருதுகோல்களை அமைத்தல், (Hypothesis) ஆய்வு செய்து இயல்புகளைக் கண்டு அறிதல், (Experiment) பின்னர் ஒரு முடிவிற்கு

வருதல். (conclusion) எனும் நால்வகைப் படிநிலைகள் உள்ளன. இந்த நால்வகை நிலைகள் எவ்வகையான அறிவியல் ஆராய்ச்சிக்கும் அடிப்படையானவை. இந்த அறிவியல் ஆய்வுமுறையில் அறிவுத்துறைகள் எல்லாவற்றிற்கும் பொருந்துவனவாக உள்ளன. மனித வாழ்க்கையின் பல்வேறு நிலைகளையும்; சிக்கல்களையும் இந்தக்கண் கொண்டு அணுகுவதும், ஆராய்வதும் இன்று பெரு வழக்காகிவிட்டன. இதற்குக் காரணம் யாது? அறிவியல் அறிவின் தாக்கம் எனச் சொல்லவும் வேண்டுமோ?

நம் முன்னோர்கள் அறியாததா ?

இது உண்மையானால், இந்த 'ஆராய்ச்சி நெறிமுறையை, நம் முன்னோர்கள் அறிந்திருக்கவில்லையா ?' எனும் ஐயம் எழலாம். நம் மூதாதையர், ஆன்மிக ஆராய்ச்சியில் ஈடுபட்டு 'நான் யார் ?' என் உள்ளம் யார்? என் ஞானங்கள் யார் ? என்பதைப்பற்றி ஆராய்ந்துள்ளனர். மற்றும் மண்திணிந்த நிலனும் நிலனேந்திய விசும்பும் விசும்புதை வரும்வளியும் வளித்தலைஇய தீயும்,தீமுரணீய நீரும் பற்றியும் ஆராய்ந்துள்ளனர்.அவ்வாராய்ச்சிக்குச் சில நெறி முறைகளைப் பின்பற்றியுள்ளனர். பெரிதும் அளவை இயல் (தருக்க) முறையில் காணல், கருதல், அனுமானித்தல் எனும் படிநிலைகளைக் கொண்டு பல்வேறு நுட்பமான, சிக்கல் வாய்ந்த கருத்துப்பொருள்களைப்பற்றி ஆராய்ந்து முடிவு கண்டுள்ளனர்.

இத்தகைய அறிவு ஆராய்ச்சி முறையை இன்றைய அறிவுலகம் எபிஸ்டமாலஜி (Epistemology) எனும் பெயரால் போற்றி வளர்த்துள்ளது. 'இதற்கு அவர்கள் பின்பற்றியுள்ள முறை இன்றைய அறிவியல் ஆராய்ச்சி முறையில் இருந்து வேறுபடுகிற உள்ளுணர்வுத் தொகுப்புமுறையின் (Intuitive reasoning) மூலம்' அவர்கள் பல உண்மைகளை கண்டு, அறிந்துள்ளனர். இதனை, அகமுகநோக்க(Introspection) ஆழ்நிலைச் சிந்தனையால் அவர்கள் பெற முடிந்தது பருப்பொருள் சார்பான பரிசோதனை(Experiment) முறை அறிவியல் ஆராய்ச்சியின் உயிர்நாடியாகும். நம் முன்னோர்கள், இதனை உள்ளத்து உணர்வு நிலைப்பட்ட அறிவு ஆராய்ச்சியால் கண்டனர்.

> ''அறிவு அறிவு என்று அங்கு
> அசற்றும் உலகம்
> அறிவு அறி யாமை
> யாரும் அறியார்
> அறிவு அறி யாமை
> கடந்து அறி வானால்

அறிவு அறி யாமை
அழகிய வாறே''

எனும் திருமந்திரப் பாடல், நம் முன்னோர்கள் போற்றிய அறிவாராய்ச்சி நிலையைத் தெளிவுறுத்துகிறது.

எனவே ஆராய்ச்சி அணுகும் முறையில் — சில படிநிலைகளில் – நம் முன்னோர்கள் மாறுபடுகின்றனர். இன்றைய 'ஆராய்ச்சி' பேரளவிற்குப் 'பரிசோதனை' முறையின் மூலம், முடிபுகளைக் கண்டு அறிவதிலேயே நாட்டம் செலுத்தி வருகிறது.

ஆராய்ச்சி என்பது யாது ?

'ஆராய்ச்சி' எனும் சொல், உணர்த்தும் பொருள் யாது ? இச் சொல்லினை 'ஆர்' எனும் பகுதியும், 'சி' எனும் தொழிற் பெயர் விகுதியும், 'ஆய்' எனும் இடைநிலையும் சேர்ந்து உருவாக்கி யுள்ளன.

'ஆர்' எனும் வேர்ச் சொல்லிற்கு ஒன்பது வகையான பொருள்கள் வழங்குகின்றன. அவற்றுள் 'நிறைவு', 'கூர்மை', எனும் இருபொருள்களும் நம் கருத்தைக் கவருவனவாகும். நிறைவான சிந்தனையை முழுமையான சிந்தனையை 'ஆர்' எனும் அடிச்சொல் உணர்த்துவதாகத் தெரிகிறது.

'ஆய்' எனும் சொல், ஐந்து பொருள்களை உடையதாகும். அவற்றுள் 'பிரித்தெடுத்தல்', 'நுணுக்கமாகக் காணுதல்' எனும் இருபொருள்களும் ஆராய்ச்சி நெறிமுறையின் படிநிலைகளை நினைவு படுத்துகின்றன.

தொல்காப்பியரே ஒரு பொருளின் உண்மை இயல்புகளை நுட்பாக அலசி ஆராய்ந்து காண்பதே, 'ஆய்தல்' எனத் தெரிந்துள்ளார்.

"ஒய்தல் ஆய்தல் நிழத்தல் சாஅய்
ஆவயின் மூன்றும் உள்ளதன் நுணுக்கம்''
(தொல். சொல். உரி. 32)

எனவே. 'நுட்பம் காணுதலே' ஆய்வு என்பது தெளிவாகிறது.

மெய்ப்பாடுகளைப் பற்றிப் பேசும்பொழுது. தொல்காப்பியர்,

'கருதல், ஆராய்ச்சி, விரைவு உயிர்ப்பெனாஅ'
(தொல். பொருள் மெய். 12)

எனும் நூற்பாவில் 'ஆராய்ச்சி' எனும் சொல்லையே பயன்படுத்தி யுள்ளார்.

இதற்கு உரைவிளக்கம் தந்த இளம்பூரணர் எனும் உரையாசிரியர், "ஒரு பொருளைக் குறித்து, அதன் இயல்பு, எத்தன்மைத்தென (கண்டறிதல்) ஆராய்தல், 'ஆய்தல்' எனினும், 'தெரிதல்' ''எனினும்' ''தேர்தல்" எனினும், 'நாடல்' எனினும் ஒக்கும்" (பொருள், உரை. நூ. 682)என விளக்கம் தந்துள்ளார்.

'பேராசிரியர்' எனும் உரையாசிரியர், 'ஒருபொருளை நன்று, தீது என்று ஆராய்தல்' எனச் சுருக்கமாகப் பொருள் கூறியுள்ளார் (பொருள். நூ. 261 உரை).

இவற்றால் தெரியவருவது யாது? ஒரு பொருளின் இயல்பு களையும், அதனால் உண்டாகும் நன்மை தீமைகளையும் நுணுக்கமாகவும் முழுமையாகவும் ஆராய்ந்து உண்மை காண முயலும் அறிவுநிலைப்பட்ட செயல்முறையே 'ஆராய்ச்சி' என்பது பெறப் படுகிறது

சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்ப் பேரகராதி, ''சோதித்தல், ஆலோசித்தல், தேடுதல்'' எனும் பொருள்களை (பக். 243), 'ஆராய்ச்சி' எனும் சொல்லிற்குத் தருவதைக் காணுகின்றோம். இவ்விளக்கம், 'ஆராய்ச்சி' எனும் சொற்பொருளின் எல்லைகளை விரிவுபடுத்திக் காட்டுகிறது.

'ஆராய்ச்சி' எனும் தமிழ்ச் சொல்லிற்கு நேரான ஆங்கிலச் சொல்லாக "ரிசர்ச்" (Research) என்பதனைப் பயன்படுத்துகிறோம். அச் சொல்லிற்குக் 'கருத்தோடு தேடுவது' (Careful Search) பல் வேறு பண்புகளையும் நுனித்து ஆய்வது (Investigation), வளர்ந்து வரும் அறிவுத் தொகுதியைப் பெருக்கும் வகையில் அமைப்பு முறை அடிப்படையில் ஆராய்வது (Systematic investigation towards increasing the sum of knowledge) எனும் பொருள்கள் கூறப்படுகின்றன. 'ரிசர்ச்' எனும் சொல்லை' 'ரி+சர்ச்' (Re + search) எனப் பிரித்தால், மீண்டும் தேடுதல்' எனும் பொருளைத் தரும். இதனால், 'திரும்பத் திரும்ப (உண்மைகாணும் ஆவலோடு) தேடுவதே ஆராய்ச்சி என்பது பெறப்படுகிறது.

மேற்கண்ட விளக்கங்களில் இருந்து, 'ஆராய்ச்சி' என்பது, ஒரு பொருளைப் பற்றி நுணுக்கமாகவும் முழுமையாகவும் அறிவதற்கு முயலும் முயற்சியே ஆராய்ச்சி;அந்தப் பொருளின் இயல்புகளையும் அதனால் உண்டாகும் நன்மை தீமைகளையும் ஆர்வத்தோடு கண் டறிவதே ஆராய்ச்சி; அதன் பண்புகளை ஆர்வத்தோடும் அதே நேரத்தில்இருஎல்லைகளுக்குச் செல்லாமல் நடுவுநிலைமையோடும்

யோடும் தேடுவதே ஆராய்ச்சி; இவ்வாறு முறைப்படுத்தப்பட்ட சிந்தனையே ஆராய்ச்சி; மனிதனுடைய அறிவுச் செல்வத்தை வலிப் படுத்துவதே ஆராய்ச்சி எனத் தெளிவாகிறது.

தமிழில் வழங்கும் பிறசொற்கள்

இளம்பூரணர் எனும் தொல்காப்பிய உரையாசிரியர் (கி. பி. பன்னிரண்டாம் நூற்றாண்டு), 'ஆய்தல், தெரிதல், தேர்தல், நாடல்' எனும் நான்கு வேறுபட்ட சொற்களும் 'ஆராய்ச்சி எனும் சொல்லின் பொருளைத் தருவதாகத் தெரிவித்துள்ளதைக் கண்டோம்.

'ஆய்' எனும் அடிச்சொல்லடியாக அமைந்த 'ஆய்வு' எனும் சொல்லே, இக்காலத்தில், பெருவழக்கினைப் பெற்றுள்ளது.இதற்கு ஆராய்கை, அகலம், நுணுக்கம்' என்பன பொருள்களாகும். 'தெரிதல்' எனும் சொல்லிற்குத் 'தெரிந்து எடுத்தல், அறிதல், ஆராய்தல், விளக்கமாதல், தோன்றுதல்' எனும் ஐந்து பொருள்கள் வழங்கு கின்றன தேர்தல் எனும் சொல்லிற்கு 'அறிதல், ஆராய்தல், சிந்தித்தல், தேடுதல், உறுதிப்படுத்துதல், கொள்ளுதல், ஐயுறுதல்' என்பன பழைய பொருள்கள், இக்காலத்தில் சனநாயக அடிப்படை யில், ஒரு பொதுப்பணிக்காக ஓர் ஆளைத் தெரிந்து எடுப்பதைத் 'தேர்தல்' (Election) எனச் சொல்கிறோம்.

'நாடுதல்' எனும் சொல் 'நாட்டம்' என்பதன் அடியாக அமை வது. 'நாடு' என்பதற்கு விருப்பம்—விரும்பு' எனும் பொருளும் உண்டு. எனவே, விருப்ப (ஆர்வத்தோடு செய்யப்படும் செயல் எல்லாமே நாடு'தலாகும். 'நாடுதல்' எனும் சொல்லிற்குத்'தேடுதல்' 'ஆராய்தல்', 'விரும்புதல்', 'தெரிதல்', ஒத்தல்', 'அளத்தல்', 'கிட்டுதல்', 'நினைத்தல்', 'அளவுபடுதல்', 'மோப்பம் பிடித்தல்' எனும் பத்து வகையான பொருள்கள் வழங்குகின்றன.

இந்த நான்கு சொற்களும், 'ஆராய்ச்சி'யின் பொருளையும், எல்லையையும், இயல்பையும், நெறிமுறைகளையும் பல்வேறு கோணங்களில் நம் மனக்கண் முன்னால் கொண்டு வந்து நிறுத்து கின்றன.

திருக்குறளில் ஆராய்ச்சி

'ஆராய்ச்சி' எனும் சொல்லினை, இக்காலத்தில் நாம் வழங்கும் பல்வேறு பொருளில் சிறப்பாக ஆராய்ச்சி நெறிமுறையின் பல்வேறு படிநிலைகளைச் சுட்டும் பொருளில் திருவள்ளுவர் பயன்படுத்தி யுள்ளார்.

"அன்(பு) அறிவு ஆராய்ந்த சொல்வன்மை தூதுரைப்பார்க்கு
இன்றி அமையாத மூன்று" (குறள் 682)

எனும் குறட்பாவில், 'ஆராய்ந்த சொல்வன்மை' நம் கருத்தைக் கவருகிறது. 'ஏற்ற சொல்லின் திறத்தை ஆராய்ந்து' என்பது இதன் பொருள் 'தேடிப்பார்த்துத் தெரிதல்' இதனால் பெறப்படுகிறது.

இதே பொருளில்,

"அறிவுரு ஆராய்ந்த கல்விஇம் மூன்றன்
செறிவுடையான் செல்க வினைக்கு" (குறள் 684)

எனும் குறட்பாவில், இச்சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது. மற்றும்,

"துறந்தார் படிவத்த ராகி, இறந்து ஆராய்ந்து
என்செயினும் சோர்விலது ஒற்று" (குறள் 586)

"அவையறிந்து ஆராய்ந்து சொல்லுக சொல்லின்
தொகையறிந்த தூய்மை யவர்" (குறள் 711)

எனும் குறட்பாக்களிலும், இதே பொருளில் இச்சொல் பயன்படுத்தப்பட்டுள்ளதைக் காணுகின்றோம்.

நன்றாக நுட்பமாகத் துருவித்துருவிப் பார்த்து முடிவிற்கு வருவது 'ஆராய்ச்சி' எனும் கருத்தினை,

"வினைசெய்வார் தம் சுற்றம் வேண்டாதார் என்றா அங்கு
அனைவரையும் ஆராய்வது ஒற்று" (குறள் 584)

எனும் குறட்பா தெரிவிக்கிறது.

நன்மை, தீமைகளைக் கண்டறிந்து, நீக்க வேண்டியதை நீக்கும் தெளிவும், உள்ளவுரனும் படைத்தவனை, வள்ளுவர் 'ஆராய்வான் (ஆராய்ச்சியாளன்) எனப் போற்றுகிறார்

"வாரி பெருக்கி வளம்படுத்து உற்றவை
ஆராய்வான் செய்க வினை" (குறள் 512)

இவ்வாறு ஆராய்ந்த, ஆராய்வது, ஆராய்வான் எனும் ஒரு பகுதி அடிப்படையில் அமைந்த பல சொற்களை 'ஆராய்ச்சியின்' பல இயல்புகளைப் புலப்படுத்தும் வகையில் வள்ளுவர் பயன்படுத்தியுள்ளார்.

ஆய்வும் ஆராய்ச்சியும் :

'ஆய்தல்' என்பதற்கு 'நுணுக்கமாகக் காணுதல்' எனும் பொருள் நெடுங்காலமாக வழங்கி வருவதை முன்னரே கண்டோம். இச்சொல், சோதனை செய்தல், பிரித்தெடுத்தல், ஆலோசித்தல், தெரிந்தெடுத்தல் எனும் பொருள்களையும் உணர்த்தும். இவை யாவும் நுணுக்கமாகக் காண முயலுதலின் பல்வேறு படிநிலைகளே யாகும்.

திருவள்ளுவர் 'ஆயும்' எனும் சொல்லை, 'ஆராய்தல் எனும் பொருளிலேயே பயன்படுத்தியுள்ளார். அரிய பயன் விளையுமா என்பதை ஆராய்ந்து பார்த்து செயல்படும் அறிஞர்கள், பேரள விற்குப் பயன் தராத சொற்களைச் சொல்லமாட்டார்கள் என்று அவர் குறிப்பிடுகிறார்.

" அரும் பயன் ஆயும் அறிவினார் சொல்லார்
பெரும் பயன் இல்லாத சொல் " (குறள் 198)

இதே பொருளில்,

" பொருட்பொருளார் புன்னலம் தோயார் அருட்பொருள்
ஆயும் அறிவினவர் " (குறள் 914)

" ஆயும் அறிவினர் அல்லார்க்கு அணங்கென்ப
மாய மகளிர் முயக்கு " (குறள் 918)

எனும் குறட்பாக்களில் 'ஆயும்' எனும் சொல் வழங்கப்பட்டுள்ளதைக் காணுகின்றோம்.

இதே கருத்தமைய 'ஆய்ந்து' எனும் சொல்லையும் அவர் பயன் படுத்தியுள்ளார்.

"இதனை இதனால் இவன்முடிக்கும் என்றுஆய்ந்து
அதனை அவன்கண் விடல்" (குறள் 517)

"அழச்சொல்லி அல்லது இடித்து வழக்கறிய
வல்லார்நட்பு ஆய்ந்து கொளல்" (குறள் 795)

'ஆய்ந்து' எனும் சொல்லில் அடுக்குத்தொடராகி 'ஆய்ந் தாய்ந்து' என்று வள்ளுவர் வழங்கியுள்ள குறட்பாவும் அவருடைய கருத்தைப் புரிந்து கொள்ள உதவுகிறது.

ஒருவருடைய இயல்புகளையும் செயல்களையும் நல்லனவா வென்று பலமுறையும் பலவகையாலும் ஆராய்ந்து பாராது,

(தொடர்ச்சி அடுத்த இதழில்)